# ஈழமுரசு அவுஸ்திரேலியா

முரசு : 01 முழக்கம் : 279 *25 October 2013* Vol : 01 Issue :279



புலி போல வருமா? 10,11

தமிழ்க்கூட்டமைப்பின் அரசியல் சூத்திரம் என்ன?




03



மாவீரர் நினைவுகளை விழுங்க முடியுமா? 09



# போர்க்குற்றவாளியின் தலைமையில் பொதுநலவாய மாநாடு





## BOYCOTT SRI LANKA

5PM MONDAY
11 NOVEMBER 2013

outside
STATE LIBRARY OF VICTORIA
Near Melbourne Central Train Station

Organised by
Campaign for Tamil Justice

Siva Kumar 040489591 - Dominic Pillai 0404802104


KANAN homes
Builders & Developers
வழங்கும்
bartercard
connecting business
..connecting people
ஆதரவில்..
Golden Musical Night
2013
தென்னிந்திய பின்னணிப் பாடகர்கள், இசையமைப்பாளர்கள் மற்றும்
பல்குரல் மன்னன் ஆகியோர் இணைந்து வழங்கும்
இன்னிசை விருந்து
பாடகர்
ஹரிச்சரண்
சுப்பர் சிங்கர் புகழ்
அல்கா
இசையமைப்பாளர், பாடகர்
சதீஸ்
பாடகர்
அருள்ஜோதி
பல்குரல் மன்னன்
மிமிக்கிரி சேது
ட்ரம்ஸ் : லிடியன்
Tickets:
Normal - $ 25
Family - $ 60
SPRINGVALE TOWN HALL
397 Springvale Rd, Springvale VIC 3171
Date : 22 Dec 2013
Time : 5.00pm - 10.00pm
Contact : ஈழத்துச்சுதன் 0423 681 025
கவிதா - 0433 381 344
கஜன் - 0469 586 556

# தமிழர் ஆதரவுத்தளங்களை ஒருங்கமைப்பதற்கு தமிழ்க்கூட்டமைப்பின் அரசியல் சூத்திரம் என்ன?

*இராஜதந்திர தரிசனம் கிடையாத வெற்று அரசியல் வெளியில் சஞ்சரிக்கும் அநாதை அரசியல் கட்சியாக தன்னை விலக்கிக்கொண்டு தமிழ் தேசிய கூட்டமைப்பு பயணப்படுகிறதா என்று தாயகத்திலிருந்து ஆராய்கிறார் அரசியல் ஆய்வாளர் நிலாந்தன்.*

ஆயுத மோதல்கள் முடிவுக்கு வந்த பின் ஸ்கண்டிநேவிய நாடொன்றிலிருந்து வந்த ஒரு டயஸ்பொறாத் தமிழர் சொன்னார், "இப்போதிருக்கும் நிலைமைகளே தொடர்ந்தும் இருக்குமாயிருந்தால் அல்லது இவற்றின் இயல்பான வளர்ச்சிப் போக்கின்படி மாற்றங்கள் நிகழுமாயிருந்தால் டயஸ்பொறாவில் உள்ள தமிழர்கள் பொதுப் பணிகளிலிருந்து விலகி தனிப்பட்ட வாழ்வின் சுக துக்கங்களிற்குள் அதிகம் முழ்கத் தொடங்கிவிடுவார்கள்... அடுத்த வசந்த கால விடுமுறைக்கு எங்கே போகலாம். பிள்ளைகளை வேறெந்த உயர்தரமான பள்ளிகளில் அல்லது பல்கலைக்கழகங்களில் படிப்பிக்கலாம் அல்லது இப்போதிருப்பதை விட வேறெப்படி வசதியாக வாழலாம்... என்பவற்றைப் பற்றியே அதிகம் சிந்திக்கத் தொடங்கிவிடுவார்கள்' என்று. ஆயுத மோதல்கள் முடிவுக்கு வந்த பின்னரான தமிழ் அரசியலில் காணப்பட்ட தேக்கத்தையும், டயஸ்பொறாவில் காணப்பட்ட ஒற்றுமையின்மையையும் கருதித்தான் அவர் அவ்வாறு கூறினார். அவர் அப்படிக் கூறி ஏறக்குறைய இரண்டு ஆண்டுகளின் பின் அண்மையில் லண்டனிலிருந்து ஒரு நண்பர் கதைத்தார்.

இங்கே இப்போது பொதுக்காரியங்களிற்கு அல்லது பொதுச்சேவைக்கு காசு திரட்டுவது கடினமாயுள்ளது. பெரும்பாலானவர்கள் தங்களுடைய தனிப்பட்ட சோலி-களையே பார்க்க விரும்புகின்றார்கள். தங்களுடைய தனிப்பட்ட கொண்டாட்டங்களை எந்தளவுக்கு ஆடம்பரமாகக் கொண்டாடலாம் என்று சிந்திக்கும் போக்கே அதிகரித்து வருகின்றது.... ஆளுக்காள் போட்டி போட்டுக் கொண்டு செலவழிக்கின்றார்கள். ஆடம்பரத்தின் அளவே அந்தஸ்தின் அளவும் என்று கருதும் ஒரு நிலைமை வேகமாக வளர்ந்து வருகின்றது'... என்று. லண்டனில் மட்டுமல்ல, புலம்பெயர்ந்த தமிழர்கள் செறிவாக, ஒரு கூட்டு அடையாளத்துடன் வாழ்ந்துவரும் அநேகமாக எல்லா நாடுகளிலும் இந்தப் போக்கு அதிகரித்து வருவதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் கூறுகின்றன.

தமிழ்ப் புலப்பெயர்ச்சியின் இரண்டாவது அலையெனப் படுவது ஈழப்போரின் நேரடியான ஒரு விளைவுதான். எனவே, போர்தான் புலப்பெயர்ச்சியைத் தூண்டியது. போர்தான் டயஸ்பொறாவையும் தாய் நாட்டையும் பிரித்தும் வைத்திருந்தது. ஆனால், அதேசமயம் அந்தப் போர்த்தான் டயஸ்பொறாவிற்கும் தாய்நாட்டிற்கும் இடையிலான பிணைப்பாகவுமிருந்து வந்தது.

திரும்பிச் செல்லவியலாத தமது ஊரைக் குறித்த ஏக்கமும் தவிப்பும் போர் உக்கிரமடைய உக்கிரமடைய மேலும் அதிகரித்துச் சென்றன. தமது ஊர் சிதைக்கப்படும்போதோ அல்லது தமது ஊரவர்கள் இடம்பெயரும்போதோ அல்லது தமக்கு வேண்டியவர்கள் கொல்லப்படவோ அல்லது காயப்படவோ அல்லது காணாமற்போகவோ நேரிடும்போது டயஸ்பொறாவில் உள்ளவர்கள் துடித்துக்கொண்டு உதவ முன்வருகின்றார்கள். எந்த யுத்தம் அவர்களைப் பிரித்துவைத்ததோ அந்த யுத்தம் தான் அவர்களை தாய் நாட்டோடும் பிணைத்தும் வைத்திருந்தது. இப்பொழுது ஆயுத மோதல்கள் முடிவுக்கு வந்துவிட்டன. புலம்பெயர்ந்த நாடுக-ளில் தீவிரமாக அரசியலில் செயற்பட்டவர்கள் மற்றும் உரிய ஆவணங்கள் இல்லாதவர்கள் தவிர மற்றெல்லாரும் தாய் நாட்டிற்கு வந்துபோகக் கூடியதாக உள்ளது. இதனால், தாய் நாட்டிற்கும் டயஸ்பொறாவுக்கும் இடையிலான உளவியற் தூரம் குறையத் தொடங்கியிருக்கின்றது.

எது ஒன்று சென்றடைய முடியாத தூரத்தில் இருக்கிறதோ அது அதன் தொலைவு காரணமாகவே தவிப்பையும், ஏக்கத்தையும் ஏற்படுத்துகிறது. மாறாக, அந்தத் தொலைவு குறையத் தொடங்க முன்பிருந்த ஏக்கமும் தவிப்பும் முற்கற்பிதங்களும் குறையத் தொடங்குகின்றன. அரசியல் விழிப்புடைய, இலட்சியப் பற்றுடைய தீவிர செயற்பாட்டாளர்கள் மட்டுமே இதில் வேறுவிதமாகச் சிந்திக்க முடியும். மற்றும்படி ஈழப்போரிற்கு வரியிறுப்போராகவோ அல்லது ஊர்வலங்களில் பங்குபற்றுவோர்களாகவோ மட்டுமிருந்து வந்த சாதாரண சனங்களைப் பொறுத்தவரை அவர்களைத் தாய் நாட்டுடன் கட்டி வைத்திருந்த யுத்தம் இப்பொழுது இல்லை. எனவே, தாய் நாட்டை மையமாகக் கொண்டு சிந்திக்கும் ஒரு போக்கிலும் மாற்றங்கள் ஏற்பட வாய்ப்புக்கள் அதிகமுண்டு.

ஆனால், தமிழ் டயஸ்பொறாவானது தாய் நிலத்தை நோக்கித் திரும்பியிருப்பதுதான் தமிழ் அரசியலின் பிரதான பலங்களில் ஒன்று. தமிழ் அரசியலின் பிரதான பேரம் பேசும் சக்திகளில் அதுவும் ஒன்று. ஆனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கடந்த நான்காண்டுகளுக்கும் மேலாக முன்னெடுத்துவரும் அரசியலானது தமிழ் டயஸ்பொறாவிடமிருந்து ஒருவித விலகலையே காட்டுகிறது.

கடந்த நான்காண்டுகளுக்கும் மேலாக டயஸ்பொறாவில் நிகழ்ந்துவரும் மாற்றங்களைக் கருதிக் கூறுமிடத்து அங்குள்ள தீவிர தேசிய சக்திகளின் மத்தியில் கூட்டமைப்பு மதிப்பிழந்து வருகிறது. பதிலாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கே ஒப்பீட்டளவில் நண்பர்கள் அதிகமிருப்பதாகத் தெரிகிறது.

இது ஒரு முரண். நாட்டில் ஏகபோக சக்தியாக மேலெழுந்து வரும் ஒரு கட்சிக்கு டயஸ்பொறாவில் ஒப்பீட்டவில் செல்வாக்குக் குறைவாகக் காணப்படும் அதேசயம், நாட்டில் பலவீனமாகக் காணப்படும் ஒரு கட்சிக்கு டயஸ்பொறாவில் ஒப்பீட்டளவில் நண்பர்கள் அதிகமிருப்பது என்பது.

வடமாகாண சபைத் தேர்தலிற்கு முன் கூட்டமைப்பினர் டயஸ்பொறாவுக்கு நிதிதிரட்டும் நோக்கத்தோடு போனபோதும் இது அவதானிக்கப்பட்டுள்ளது. மேலும் தேர்தலிற்கு முன்னும் பின்னும் கூட்டமைப்பின் முக்கியஸ்தர்கள் தெரிவித்திருந்த சில கருத்துக்கள் டயஸ்பொறாவிலும் தமிழ் நாட்டிலும் உள்ள தீவிர



தேசிய சக்திகள் மத்தியில் கோபத்தை ஏற்படுத்தியிருந்தன.

மாகாண சபைத் தேர்தலில் கூட்டமைப்புக்குக் கிடைத்த மிகப்பெரிய வெற்றியானது தமிழ்நாட்டில் உள்ள சில தீவிர தேசிய சக்திகள் மத்தியில் வேறுவிதமான உணர்வலைகளைத் தோற்றுவித்திருக்கின்றது. தமிழ் நாட்டை விலகியிருக்குமாறு கூறிய கூட்டமைப்புக்கு மக்கள் இந்தளவு பெரிய வெற்றியைக் கொடுத்தது என்பது தமிழ் நாட்டில் உள்ள தீவிர தேசியவாதக் கட்சிகளின் அடிமட்டத் தொண்டர்கள் மத்தியில் ஒருவித குழப்பத்தை ஏற்படுத்தியிருப்பதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.கூட்டமைப்பு ஒரு ஏக போக சக்தியாக மேலெழுந்து வரும் ஒரு பின்னணியில், கூட்டமைப்பை மீறி ஈழத்தமிழ் அரசியலில் தங்களால் எதைச் செய்ய முடியும் என்ற ஒரு கேள்வி மேற்படி அடிமட்டத் தொண்டர்கள் மத்தியில் காணப்படுவதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கூட்டமைப்புக்குக் கிடைத்த பெருவெற்றியை அதன் தலைவர்கள் பின்பற்றிவரும் புலி நீக்கம் செய்யப்பட்ட மென்தேசிய நிலைப்பாட்டிற்குக் கிடைத்த ஒரு மக்கள் ஆணை-யாக பிழையாக விளங்கிக் கொள்ளுமிடத்து மேற்படி குழப்பங்கள் ஏற்பட இடமுண்டுதான். அதேசமயம், கூட்டமைப்பின் தலைவர்களுடைய மென்தேசிய நிலைப்பாட்டிற்கும் மக்கள் அவர்களிற்கு வழங்கிய ஆணைக்குமிடையில் இடைவெளி இருக்கின்றதோ இல்லையோ இப்போதுள்ள நிலைமைகளின் படி தமிழ் அரசியலைப் பெறுத்த வரை கூட்டமைப்புத்தான் ஒரே பிரதான மையம்.

குறிப்பாக, வடமாகாண சபைத் தேர்தல் முடிவுகளோடு கூட்டமைப்பே தமிழ் அரசியலின் ஏகபோக சக்தியாக மேலெழுந்துவிட்டது. இப்போதைக்கு யார் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் தமிழ் அரசியல் எனப்படுவது அதன் பிரயோக நிலையில் கூட்டமைப்பு மைய அரசியல் தான். வுயேு உநவெசைஉ இனி யார் எதைச் செய்தாலும் ஒன்றில் கூட்டமைப்பை ஆதரித்துச் செய்ய வேண்டும் அல்லது எதிர்த்து செய்ய வேண்டும என்ற நிலையே உருவாகி வருகிறது.

இத்தகையதொரு பின்புலத்தில் டயஸ்பொறாவையும் தமிழ் நாட்டையும் உள்ளடக்கிய ஒரு நிகழ்ச்சி நிரலை கூட்டமைப்புக் கொண்டிருக்கின்றதா என்ற கேள்வியே இங்கு முக்கியமானது.

கூட்டமைப்பின் கடந்த நான்காண்டுகளுக்கும் மேலான செயற்பாடுகளை வைத்துப் பார்க்கும்போது குறிப்பாக, வடமா-காண சபைத் தேர்தலிற்கு முன்னும் பின்னுமான அதன் செயற்பாடுகளை வைத்துப் பார்க்கும்போது அப்படியொரு ராஜதந்திர தரிசனம் அதாவது களத்தையும் புலத்தையும் தமிழ்நாட்டையும் ஒரு கோட்டில் கொண்டுவரும் ஒரு நிகழ்ச்சி நிரல் கூட்டமைப்பிடம் இருப்பதாகக் கருத முடியவில்லை. மேலும் அதன் முக்கியஸ்தர்கள் தெரிவிக்கும் கருத்துகளிற்கிடையில் காணப்படும் முரண்பாடுகளையும் குழப்பங்களையும் வைத்துப் பார்க்கும்போது அப்படியொரு முடிவுக்கே வரவேண்டியிருக்கின்றது. அதாவது, தேர்தல் பிரசாரத்தில் கூட்டமைப்பு பிரகடனம் செய்த ராஜதந்திரப் போர் எனப்படுவது ஒரு பிரசார உத்தியாகப் பயன்படுத்தப்பட்ட வெற்றுச் சுலோகமா என்று கேட்கத் தோன்றுகின்றது.

ஈழத் தமிழர்களின் ராஜிய அரங்கைப் பொறுத்தவரை தமிழ் டயஸ்பொறாவும் தமிழ்நாடும் இரு பிரதான நெம்புகோல்களாகும். இவ்விரு நெம்புகோல்களையும் வெற்றிகரமாகக் கையாள முடியாத எந்தவொரு வியூகமும் சக்திமிக்க நாடுகளின் நிழ்ச்சி நிரலுக்கு சேவகஞ்செய்வதிலேயே சென்று முடியும்.

மே 18 இற்குப் பின்னர் மட்டுமல்ல, மே 18 இற்கு முன்னரும் கூட ஈழத்தமிழ் அரசியல் எனப்படுவது இலங்கைத்தீவின் எல்லைகளுக்குள் தீர்க்கப்பட முடியாத ஒரு வளர்ச்சியைப் பெற்றுவிட்டது. அல்லது இலங்கைத் தீவின் எல்லைகளுக்கு வெளியில்தான் கையாளப்பட வேண்டிய ஒரு விவகாரமாக உருவாகிவிட்டது என்றும் கூறலாம். ரணில் - பிரபா உடன்படிக்கை எனப்படுவது அதன் வெளிப்பாடுதான். எனவே, இச்சிறு தீவின் எல்லைகளுக்கு வெளியே கையாளப்பட வேண்டிய ஒரு விவகாரம் என்று வரும்போது தமிழ் நாடும் தமிழ் டயஸ்பொறாவும் தான் அதன் இரு பிரதான ஆடுகளங்கள் ஆகும். இந்த இரண்டு களங்களையும் விலகச் செய்துவிட்டு கூட்டமைப்பானது அது தேர்தலின்போது பிரகடனம் செய்த ராஜதந்திரப் போரை நடர்த முடியாது. ஒரு பறவை தனது சிறகிரண்டையும் தூண்டித்துவிட்டு பறக்க முற்படுவதைப் போன்றது இது.

எனவே, மெய்யான பொருளில் ஒரு ராஜதந்திரப் போ-ரைக் குறித்துச் சிந்திப்பதாக இருந்தால் கூட்டமைப்பானது களம், புலம், தமிழகம் ஆகிய மூன்றையும் உள்ளடக்கிய ஒரு வியூகத்தை வகுக்க வேண்டும். முதலில் டயஸ்பொறாவை நோக்கியும், தமிழ் நாட்டை நோக்கியும் நம்பிக்கையூட்டும் சமிக்ஞைகளை அனுப்ப வேண்டும். குறிப்பாக, தமிழ் நாட்டில் உள்ள கட்சிகளை நோக்கி நல்லெண்ணச் சமிக்ஞைகளை அனுப்பினால் மட்டும் போதாது பதிலாக, கட்சிசார் நலன்களுக்கு அப்பாற்பட்டு செயற்படும் தரப்புகளை நோக்கி நம்பிக்கையூட்டும் சமிக்ஞைகள் அனுப்பப்பட வேண்டும். கடந்த நான்காண்டுகளுக்கும் மேலாகத் தனது உயர் மட்டத்தைப் புலி நீக்கம் செய்துவரும் கூட்டமைப்பின் தலைமையானது டயஸ்பொறாவிலும் தமிழ் நாட்டிலும் உள்ள தீவிரதேசிய சக்திகளின் இதயத்தில் இடம்பிடிப்பதில் உள்ள நடை முறைச் சிக்கல்கள் புரிந்து கொள்ளப்படத்தக்கவையே. எனினும், குறிப்பாக, வடமாகாண சபைத் தேர்தலையொட்டியும் அதற்குப் பின்னரும் கொழும்பில் உள்ள கடுங்கோட்பாளர்களுக்கும் அனைத்துலக மற்றும் பிராந்திய சக்திகளுக்கும் நல்லெண்ணச் சமிக்ஞைகளை அனுப்புவதில் காட்டப்பட்ட அளவு ஆர்வம் டயஸ்பொறாவை நோக்கியும் தமிழ் நாட்டை நோக்கியும் காட்டப்படவில்லை என்பதை இந்த இடத்தில் சுட்டிக்காட்டப்பட வேண்டும்.

எவையெவை ஈழத்தமிழர்களின் மெய்யான பலங்களோ எவையெவை ஈழத்தமிழர்களுடைய பிரதான பேரம் பேசும் சக்திகளோ அவற்றையெல்லாம் விலக்கி வைக்குமொரு ராஜதந்திர வியூகம் எனப்படுவது அரசுத் தலைவர்களையும், ராஜதந்திரிகளையும் கட்சித் தலைவர்களையும் சந்தோசப்படுத்த உதவக்கூடும். ஆனால், அது ஈழத்தமிழர்களை தீர்வற்ற தீர்வு ஒன்றிற்குள் பெட்டி கட்டிவிடும். அதோடு அத்தீர்வை எதிர்த்து அதைக் கடந்து முன்செல்ல முற்படும் மாற்றுச் சக்திகளின் வழி-யில் கூட்டமைப்பே ஒரு நந்திபோல நிலையான நலன்களைக் கட்டிப்பிடித்தபடி குந்தியிருக்கும் ஒரு ஆபத்தான வளர்ச்சிக்கும் கொண்டுபோய்விடக்கூடும்.

# நம்மவர் நிகழ்வுகள்

## விக்டோரியா மாநிலத்தில்

| | |
|---|---|
| *26th Oct 2013* | *Casey Tamil Mantram's Monthly Seniors Meeting & AGM* |
| *26th Oct 2013* | *Annual Tamil Literary Festival - Valluvar Foundation* |
| *27th Oct 2013* | *Bharathy Tamil School - Senior Students Annual Concert (Thamil Maalai 2013)* |
| *27th Oct 2013* | *Annual Tamil Literature & culture villah 2013 - ATLAS* |
| *2nd Nov 2013* | *ASoGT Tamil Competition 2013 - Prize Giving Ceremony* |
| *3rd Nov 2013* | *Deepavali Get Together & Variety Show - ETA Victoria @ Hungarian Hall* |
| *3rd Nov 2013* | *Malarum Mottukkal - Children Programme @ Kelwatson Theatre* |
| *3rd Nov 2013* | *Kamban Vizha - Kamban Kazhagam @ St Jude hall* |
| *10th Nov 2013* | *Vanna Thamil Maalai - Whittlesea Tamil Association* |
| *11th Nov 2013* | *CHOGM Protest (Boycott Srilanka) @ State Library of Vic* |
| *16th Nov 2013* | *Tamil Senior Citizens Fellowship - Monthly Meeting* |
| *23rd Nov 2013* | *Muthamil Villah - ETA* |
| *23rd Nov 2013* | *Casey Tamil Mantram's Monthly Seniors Meeting* |
| *24th Nov 2013* | *Fund Raising Dance Programme @ Springval Town Hall* |
| *27th Nov 2013* | *Maveerar Remembrance Day 2013 - TCC Vic @ Hungarian Hall* |
| *1st Dec 2013* | *Pularum Poopaalam 2013 - Killinochchi Mahadeva Ashramam* |
| *1st Dec 2013* | *Christmas Carols - SJC OBA & Chundikulli OGA* |
| *7th Dec 2013* | *Tamil Senior Citizens Fellowship - Monthly Meeting* |
| *14th Dec 2013* | *Casey Tamil Mantram's Monthly Seniors Meeting* |
| *14th Dec 2013* | *Laughing Co Laughing 2013 -Australian Medical Aid Foundation (AMAF) Bundoora* |
| *15th Dec 2013* | *Laughing Co Laughing 2013 -Australian Medical Aid Foundation (AMAF) Rawville* |
| *25th Dec 2013* | *TRO Australia's Annual Christmas Appeal on 3CR & 24Hr IBR* |
| *5th Jan 2014* | *Annual Cricket tournament by JHC OBA Vic* |
| *19th Jan 2014* | *Kittu Rememberance Tamil Sports Day & Food Fair - TCC Vic* |
| *8th Mar 2014* | *Vertyil Oru Party - SJC OBA* |
| *23rd Aug 2014* | *Dinner Dance- SJC OBA* |

***VIC - Monthly Meetings***

*Casey Tamil Mantram's Monthly Seniors Meeting (4th Saturday of Month)*
*26th Oct, 23rd Nov, 14th Dec*
*Time: 10.00 am - 2.30 pm @ Berwick Senior Citizens Hall, 112 High Street, Berwick, 3806*

*Tamil Senior Citizens Fellowship - Monthly Meeting (3rd Saturday of Month)*
*16th Nov, 7th Dec*
*Time: 11 am - 2.30 pm @ Oakleigh Hall, 142 Drummond St, Oakleigh 3166*

## நியூ சவுத் வேல்ஸ் மாநிலத்தில்

| | |
|---|---|
| *26-Oct Sat* | *Kamban Vizha 1 st Day- Kamban Kazhagam* |
| *26-Oct Sat* | *Arangadal 2013 -Jaffna University Graduates Association* |
| *26-Oct Sat* | *Thillaana -3 - Sydney Tamil Manram* |
| *26-Oct Sat* | *Polling Day - second General Election of Transna tional Government of Tamil Eelam ( TGTE)* |
| *27-Oct Sun* | *Kamban Vizha 2 nd Day- Kamban Kazhagam* |
| *2-Nov Sat* | *Cultural Event - Australian Tamil Events(ATE)* |
| *3-Nov Sun* | *Annual General Meeting of Tamil Consortium* |
| *9-Nov Sat* | *Tamil Osai Ilakkiya Vizaa* |
| *10-Nov Sun* | *Annual Program – Bharatalaya Dance Academy , Sydney* |
| *21-Nov Thurs* | *Maaveerar Vaaram 21-27 November 2013* |
| *22-Nov Fri* | *Maaveerar Vaaram 21-27 November 2013* |
| *23-Nov Sat* | *Maaveerar Vaaram 21-27 November 2013* |
| *24-Nov Sun* | *Maaveerar Vaaram 21-27 November 2013* |
| *25-Nov Mon* | *Maaveerar Vaaram 21-27 November 2013* |
| *26-Nov Tues* | *Maaveerar Vaaram 21-27 November 2013* |
| *27-Nov Wed* | *Maveerar Remembrance Day 2013 - Tamil Co-ordinating Committee* |
| *30-Nov Sat* | *AGM- Eastwood Tamil Study Centre* |
| *8-Dec Sun* | *Muththamil Maalai 2013 -Australian Medical Aid Foundation ( AMAF)* |
| *14-Dec Sat* | *Wentworthville Tamil Study Centre- Prize giving and AGM* |
| *14-Dec Sat* | *Annual Dinner and Presentation Night - Eastwood Tamil Study Centre* |
| *14-Dec Sat* | *Uravukkarangal ( a stage program)- Eelam Tamil Association* |
| *25-Dec Wed* | *Christmas* |
| *31-Dec Tues* | *End New Year* |

***Note***

*1. All Associations may use this calendar for their advantage ;*
*2. Next calendar would improve in all aspects;*
*3. Event shown in bold is an amendment to the previous updated calendar.*
*4. * Given by others to Eelamuasu*

*1. Monthly meeting of Consortium of Tamil Associations is on the first Sunday of the month( 2pm-4pm).*
*2. Monthly meeting of Eelam Tamil Association is on the third Sunday of the month ( 3pm-5pm).*
*3. Monthly meeting of Tamil Co-ordinating Committee is on the last Saturday of the month ( 5pm-6.30pm).*
*4. Monthly Food Fair of Tamil Co-ordinating Committee is on the first Saturday of the month( 10am-3pm).*



ஈழமுரசு

அஞ்சல் தொடர்புகளுக்கு
*Eelamurasu*
*P.O.Box 80*
*Kingsville*
*Vic 3012 Australia*

ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
*emurasu@gmail.com*

விளம்பர விநியோக
தொடர்புகளுக்கு
*advertise@eelamurasu.com.au*
*0402948607*

வருட சந்தா
$ 60.00
மட்டுமே

குறிப்பு
இவ்விதழில் பிரசுரிக்கப்படும்
விளம்பரங்களுக்கு அந்தந்த
விளம்பரதாரர்களே பொறுப்பு.
வெளிவரும் ஆக்கங்களை மறுபதிப்புச்
செய்பவர்கள் முன்னனுமதி பெறவேண்டும்.

COMMUNITY NEWSPAPER ASSOCIATION
MEMBER
OF VICTORIA

## அறிவித்தல்

வாசகர்கள் மற்றும் விளம்பரதாரர்கள் அனைவரும் ஈழமுரசிற்கான உங்களது ஆக்கங்கள் மற்றும் விளம்பரங்கள் ஆகியவற்றை மேலுள்ள மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கும்படி அன்புடன் வேண்டிக் கொள்கின்றோம்.

– நிர்வாகம்

# ஆசிரியர் தலையங்கம்

முரசு - 24 முழக்கம் - 301

## ஈழத்தமிழர் போராட்டத்துக்கு வலுச்சேர்க்கும் தமிழக அரசியல்

ஈழத்தமிழரின் உரிமைப் போராட்டத்துக்கு தமிழகம் எப்போதுமே பக்கபலமாக விளங்கி வந்துள்ளது. வன்முறையற்ற வழியிலான போராட்டக் காலத்திலும் சரி, ஆயுதப் போராட்டக் காலத்திலும் சரி, முள்ளிவாய்க்கால் பேரழிவின் பின்னரான காலப்பகுதியிலும் சரி, தமிழகத்தின் வகிபாகம் ஈழப்போராட்டத்தில் தவிர்க்க முடியாததாகவே இருந்து வந்துள்ளது. ஆயுதப்போராட்டத்தின் தொடக்க காலத்தில் தமிழகத்தின் பங்கு விவரிக்க முடியாதளவுக்கு வியாபித்திருக்கின்றது.

இடையிலே தொய்வுகள் ஏற்பட்டாலுங்கூட ஈழத்தமிழருக்கான ஆதரவுத்தளமாக எப்போதும் தமிழகம் தனது பங்களிப்பைச் செய்தே வந்திருக்கின்றது.

சர்வதேச வெளியில் ஈழத்தமிழரின் போராட்டத்துக்கான ஆதரவை வென்றெடுப்பதற்கான களமாக புலம்பெயர்ந்த தமிழரின் பங்களிப்புக்கிருக்கும் அதே தார்ப்பரியம் தமிழகத்துக்குமுண்டு என்றால் அது மிகையன்று. மிகச் சிக்கலான பன்னாட்டு, பிராந்திய வல்லாதிக்கப் போட்டியிலும் வியாபாரச் சூதுகளிலும் ஈழத்தமிழரின் சுதந்திர வேட்கைக்கான நியாயம் அடிபட்டுச் செல்லப்படாமலிருக்க இவ்விரு தளத்திலுள்ள தமிழர்களும் மிகக்கடுமையாக உழைத்தே ஆகவேண்டிய கட்டாயமுண்டு.

அவ்வகையில் அண்மைக்காலத்தில் தமிழகத்தில் ஏற்பட்டுவரும் எழுச்சியும் அதன் விளைவான செயற்பாடுகளும் எமது விடுதலைப் போராட்டத்துக்கான மாபெரும் உந்துசக்தியாகத் திகழ்கின்றன.

ஜெனிவாவில் நிகழ்ந்த ஐ.நா.வின் மனிதவுரிமைக் கூட்டத்தொடரின் போதான தமிழக மாணவர்களின் எழுச்சி, அதைத் தொடர்ந்த தமிழக அரசின் சட்டசபைத் தீர்மானம் என்பன இந்திய மண்ணில் எமது போராட்டத்துக்கான மிகப்பெரும் அங்கீகாரத்தை வழங்கியதோடு ஈழத்தமிழரின் இன்னல்மீதும் அவர்தம் விடுதலை அவா மீதும் வெளிச்சத்தைப் பாய்ச்சிய நிகழ்வுகளாக அமைந்தன. நீண்டகாலத்தின் பின்னர் ஒன்றுபட்ட மக்கள் எழுச்சியும் அதன் காரணத்தால் தமிழக அரசே ஒரு தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டிய நிலையும் தோன்றியது.

அதன்பின்னர் கொழும்பில் பொதுநலவாய நாடுகளின் மாநாடு நடைபெறுவதைத் தொடர்ந்து உலகம் முழுவதும் ஏற்பட்ட அதிர்வலைகளின் தொடர்ச்சியாக தமிழகத்தில் நீண்டகால தமிழீழ விடுதலைப் போராட்ட ஆதரவாளரும் தீவிர செயற்பாட்டாளருமான தோழர் தியாகு அவர்களின் சாகும்வரை உண்ணாநிலைப் போராட்டம் தொடங்கப்பட்டது. முன்பு போலன்றி இப்போது மத்திய அரசின் நிலைப்பாடுகளை அசைத்துப்பார்க்கும் நிலைக்கு தமிழகத்தின் எழுச்சி வளர்ந்துகொண்டிருப்பதை அவதானிக்க முடிகின்றது.

தியாகுவின் உண்ணாநிலைப் போராட்டத்துக்கு அடுத்து, அண்மையில் தமிழக அரசு மீண்டும் ஒருமுறை சட்டசபையில் ஒரு காட்டமான தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளது.

கடந்த 24-10-2013 திகதியன்று தமிழ் நாடு சட்டசபையில் நவம்பர் மாதம் இலங்கையில் நடைபெறவுள்ள கொமென்வெல்த் நாடுகளின் தலைவர்களின் கூட்டத்தை இந்தியப் பிரதமர் முற்றுமுழுதாக புறக்கணிக்க வேண்டும் என்றும், இந்தியாவின் பிரதிநிதித்துவம் பெயரளவுக்கேனும் அம்மாநாட்டில் அமையக்கூடாதென்றும், அத்துடன் தமிழர்கள் சுதந்திரமாகவும் சிங்களவர்களுக்கு இணையாகவும் இலங்கையில் வாழக்கூடிய சூழலை சிறீலங்கா அரசு உருவாக்கும் வரையில் கொமென்வெல்த் கூட்டமைப்பிலிருந்து இலங்கை தற்காலிகமாக நீக்கப்படல் வேண்டும் என்றும் வலியுறுத்தி தமிழ் நாடு சட்டசபை தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

இத்தீர்மானம் சரியான நேரத்தில் வெளிவந்த ஒரு மிக முக்கியமான தீர்மானமாகவே பார்க்கப்பட வேண்டும். உலக நாடுகளின் கண்ணோட்டத்திலும் கருத்துருவாக்கத்திலும் ஈழத்தமிழர் தொடர்பான தமிழ்நாட்டு அரசியல் நிலைப்பாடு கணிசமான தாக்கத்தைச் செலுத்தியே தீருமென்பதில் ஐயமில்லை. அதேபோல் இந்திய அரசின் நிலைப்பாட்டிலும் தவிர்க்கமுடியாதபடி அது செல்வாக்குச் செலுத்தியே தீரும்.

இந்நிலையில் ஈழத்தமிழரின் விடுதலை வேட்கையையும் அதற்கான அவர்களின் உரித்துடைமையையும் உலகின் வெளிச்சத்துக்குக் கொண்டுவந்து சேர்க்கும் திறவு வாயிலாக இருக்கும் தமிழகத்தின் எழுச்சியும் செயற்பாடுகளும் மிகமுக்கிய பாத்திரத்தை வகிக்கின்றன. இந்தியத் துணைக்கண்டப் பிராந்தியத்திலும் உலகநாடுகளிடமும் மாற்றத்தைக் கொண்டுவர வேண்டிய கடப்பாடும் புறச்சூழலும் தமிழகத்துக்குண்டு. அவ்வகையில் தமது வரலாற்றுக் கடமையைத் தமி ழகம் செய்யுமென்று நம்புவோம். இதுபோல் தொடர் எழுச்சிப் போராட்டங்களும் அரசியல் தீர்மானங்களும் எமது விடுத லைப் போராட்டப் பயணத்துக்கு என்றும் உறுதுணையாயிருந்து வலுச்சேர்க்கும்.



# மாநாட்டு அச்சம்: கலக்கத்தில் இலங்கை அரசு



## தாயகத்திலிருந்து புனிதன்

பொதுநலவாயத்தின் 23ஆவது அரச தலைவர்கள் மாநாட்டை எதிர்வரும் நவம்பர் நடுப்பகுதியில் நடத்துவதற்குத் தேவையான ஆயத்தங்களை இலங்கை அரசு உற்சாகமாகச் செய்து வருகின்ற போதிலும், அம்மாநாட்டுக்கு வருகை தரும் நாடுகள் குறித்து தனது அவதானிப்புகளை மேலும் செலுத்த வேண்டிய நிலையில் இருக்கிறது.

பொதுநலவாய அரச தலைவர்கள் மாநாட்டை இலங்கையில் நடத்துவதன் மூலம் உலகத்தின் பார்வையைத் தன்மீது திருப்புவதற்கும், அதன்மூலம் வர்த்தக நலன்களைப் பெற்றுக் கொள்வதற்கும் எல்லா நாடுகளையும் போலவே இலங்கையும் முயன்று வருகின்ற அதேவேளையில் சம்பிரதாய பூஉவமாகப் பொதுநலவாயத்தின் தலைமைப் பொறுப்பை இலங்கைத் தலைவர் பெற்றுக்கொள்வதன் மூலம் தற்போது இலங்கை அரசுக்கும் ஜனாதிபதிக்கும் எதிராக எழுந்துவரும் உலக நாடு களின் அழுத்தங்களைக் குறைத்துவிடலாம் எனவும் அது நம்புகிறது.


*கறை துடைக்கும் கருவி*

53 நாடுகளைக் கொண்ட ஓர் அணியின் தலைமைப் பொறுப்பை இரண்டு ஆண்டுகளுக்கு ஏற்றுக்கொள்வதென்பது சாதாரண விடயமல்ல. இலங்கை ஜனாதிபதிக்கு உலக அரங்கில் மிகப்பெரும் பலத்தையும் பிரபலத்தையும் தருகின்ற ஒன்று அது. இப்பதவியைப் பெற்றுக்கொள்ளும் ஒருவர் அரசியல் ரீதியாக சில செயற்பாடுகளை முன்னெடுத்து தன்னை மேலும் உயர்த்திக்கொள்ளவோ அல்லது தன் மீதுள்ள கறைகளை இல்லாமல் செய்யவோ வாய்ப்பிருக்கிறது. இலங்கை ஜனாதிபதி யைப் பொறுத்தமட்டில் தன்மீதும் தன் அரசின் மீதும் உலக நாடுகளால் சுமத்தப்படும் பழியைத் துடைத்துக் கொள்வதற்கான ஒரு கருவியாக இப்பதவியைப் பயன்படுத்த முடியும்.

*மாநாட்டு எதிர்ப்பு*

ஆனால் இந்த எண்ணத்தில் மண் விழுந்துவிடுமோ என்ற அச்சம்தான் இலங்கையை ஆட்டிப்படைத்துக் கொண்டிருக்கிறது. உள்நாட்டிலும் அரசுக்கு எதிரான பரப்புரைகள் அதிகரித்துக் கொண்டிருக்கின்றன. ஐக்கிய தேசியக்கட்சியும் மூன்றாவது பலமான அணியென்று தன்னை விளம்பரப்படுத்திக்கொள்ளும் பொன்சேகா கட்சியும் பொதுநலவாய நிகழ்வை நேரடியா-கவே எதிர்க்கின்றன. ஜனநாயகம் இல்லாத ஒரு நாட்டில் ஏன் இந்தக் கூத்து என்று கேள்வி எழுப்புகின்றன. குடும்ப ஆட்சியை மேலும் வலுப்படுத்துவதற்கான ஏற்பாடுகளா இவை என்றும் கேட்கின்றன.

எதிர்க்கட்சிகள் பலமிழந்து போயுள்ளன. இவற்றின் எதிர்ப்பையிட்டு அலட்டிக்கொள்ளத் தேவையில்லை என்று அரசு சமாதானம் சொல்லிக்கொள்ளலாம். எனி னும் எதிர்க்கட்சிகள் பலமிழந்து போவதற்கு அவற்றின் பலவீ-னமான நடவடிக்கைகளையோ அரசின் சிறப்பான காய் நகர்த்தல்களையோ காரணமாகக் கூறமுடியாது. இலங்கையைப் பொறுத்தவரையில் எவர் ஜனாதிபதியாக இருக்கிறாரோ அவர் சார்ந்த கட்சியே தொடர்ந்தும் வெற்றிகளைக் குவிக்கும் வகையில் அரசமைப்பிலேயே வழிவகுக்கப்பட்டிருக்கிறது. ஒருவேளை அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சி சார்ந்த ஒருவர் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்படுவாரேயானால் எதிஉவரும் கால்நூற்றாண்டுக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியால் தலையெடுக்க முடியாமல் போய்விடும் என்பதுதான் உண்மை.







ஆனால் 1978 தொடக்கம் 1994 வரையிலான காலப்பகுதியில் இதே ஜனநாயக உத்திகள் மூலம்தான் தாங்கள் வல்லாட்சி நடத்தி வந்ததை ஐக்கிய தேசியக் கட்சி மறந்துவிடக்கூடாது.

தமிழர்களின் ஆதங்கம் அரசால் புறந்தள்ள முடியாதது. இது ஓர் இனத்தின் எழுச்சி: ஒடுக்கப்பட்ட ஒரு சமுதாயத்தின் விழிப்புணர்வு: இலங்கை சுதந்திரமடைந்த காலந்தொட்டு நிகழ்ந்த கொடுமைகளால் துவண்டுபோன ஓர் இனத்தின் மூச்சு: பட்டறிவின் வழிநின்று எடுக்கப்பட்ட அரசியல் தீர்மானம்: பல உயிரிழப்புகளுக்கூடாக நடந்து வந்த பாதை.

*தமிழர் பின்னால் உலகம்*

தமிழர்களின் ஆதங்கமும் கோரிக்கைகளும் நியாயமா-னவை என்பதால்தான் இன்று உலகம் அவர்கள் பின் நிற்கிறது. இலங்கை அரசின் சக்தியையும் இராஜதந்திரங்களையும் மீறிப் புலம்பெயர்ந்த தமிழர்களால் மேற்குலநாடுகளில் செயல்பட முடிகிறது. இலங்கை அரசுக்கு எதிரான நியாயபூர்வமான அபிப்பிராயத்தை உருவாக்க முடிகிறது.

கனடா இம்மாநாட்டில் கலந்துகொள்ளப் போவதில்லை என்று ஏற்கனவே திட்டவட்டமாக அறிவித்திருந்தது. இலங்கை மனித உரிமை மீறல்கள் நிறைந்த நாடு: தமி ழர்களை தொடர்ந்தும் அடக்கியாள முனைகின்ற நாடு என்பவைதாம் கலந்துகொள்ளாமைக்கான காரணங்களாக முன்வைக்கப்பட்டிருக்கின்றன. இலங்கை வெளியுறவுத்துறை எவ்வளவோ முயன்றும் கனடாவின் நிலைப்பாட்டில் ஒரு சிறி ய அசைவைத்தானும் ஏற்படுத்த முடியாது போய்விட்டது. கடைசியில் அரச தலைவர் மேல் தனது கோபத்தைக் கொட்டித் முடியும் எனவும் இலங்கை அரசு தெரிவித்திருக்கிறது.

பொதுநலவாயம் என்பது இலங்கை நினைப்பதுபோல மனித உரிமை மீறல்கள் பற்றிப் பேசப்படக்கூடாத அரங்கமல்ல. பொழுதுப் போக்குக்காகக் கூடிக் கலைகின்ற கேளிக்கை நிகழ்வுமல்ல. அது சில அடிப்படை நோக்கங்களை முன்வைத்து தனது செயற்பாடுகளை நகர்த்தி வருகின்றது. ஒரு நாட்டைத் தண்டிக்க அதற்கு எவ்வித அதிகாரமும் இல்லை என்பதற்காக அம்மாநாட்டில் பேசப்படும் விடயங்கள் காற்றோடு கரைந்துபோகக்கூடியவை என எதிர்பார்க்க முடியாது.

தனது உறுப்பு நாடுகளுக்கிடையேயான நல்லுறவும் இணக்கப்பாடும், ஒவ்வொரு நாட்டினதும் நல்லாட்சி, சட்டத்துக்கு இசைவான ஆட்சிமுறைமை, உறுதியான ஜனநாயகம், மனித உரிமைகளுக்கான பாதுகாப்பு, நேரிய அபிவிருத்தி என்பவற் அடிநாதமாகக் கொண்டுதான் பொதுநலவாயம் இயங்குகின்றது. இவைபற்றிய ஆய்வுக்காகவும், முன்னேற்றங்கள் தொடர்பான உறுதிப்பாடுகளுக்காகவுமே அதன் அரச தலைவர்கள் மாநாடு இரண்டு ஆண்டுகளுக்கு ஒருதடவை கூடுகிறது.

*இலங்கையிடம் தடுமாற்றம்*

இதன்படி பார்த்தால் மனித உரிமை மீறல்களை அம்பலப்படுத்தும் மேடையாக இலங்கையில் இடம்பெறவுள்ள பொதுநலவாய மாநாட்டைப் பயன்படுத்தப் போகிறோம் என்று பிரிட்டன் பிரதமர் தெரிவித்ததில் எவ்வித முறைகேட்டையோ, தடுமாற்றத்தையோ காண முடியாது. மாறாக இலங்கை விடுத்த

18 ▶

*தமிழர்களின் எதிர்பார்ப்பு*

தமிழர் தரப்பைப் பொறுத்தவரையில் அரச தலைவர்கள் மாநாட்டின்மூலம் தங்கள் பிரச்சினையை முக்கியத்துவப் படுத்துவதனூடாக ஒரு நிரந்தரத் தீர்வுக்கு வழிகோல முடியாதா என்ற எதிர்பார்ப்பே நிந்து காணப்படுகிறது. பொதுநலவாய மாநாடு இலங்கையில் இடம்பெறக்கூடாது என்பது தமிழர்களின் நோக்கமல்ல. இந்த மாநாட்டினூடாகத் தமிழர் வதை படலத்துக்கு ஒரு முடிவு கிட்டாதா என்றுதான் அவர்கள் எதிர்பார்க்கிறார்கள். அதற்கு என்னென்ன வழிவகைகளைக் கையாள முடியுமோ அவற்றை உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் ஜனநாயக வழிகளுக்குட்பட்டுத் தீவிரமாகச் செய்து வருகிறார்கள்.

*ரணில், பொன்சேகா எதிர்ப்பு*

ஐக்கிய தேசியக் கட்சியும் சரத்பொன்சேகாவின் கட்சியும் பொதுநலவாய மாநாடு இலங்கையில் இடம்பெறுவதை விரும்பவில்லை. மத்திய ஆட்சியைத்தான் பிடிக்க முடியவில்லை: மாகாண ஆட்சியையோ உள்ளூராட்சி ஆட்சியையோ தாங்கள் கைப்பற்ற முடியாத வகையில் அரசின் ஜனநாயக உத்திகள் முட்டுக்கட்டை போடுகின்றனவே என்ற கவலை அவர்களுக்கு.

தீர்ப்பதைத் தவிர இலங்கைக்கு வேறுவழி இருக்கவில்லை.

*பிட்டன் பிரதமரும் அதிரடி*

பிரிட்டன் பிரதமர்கூட பல எதிர்ப்புகளுக்கு மத்தியில்தான் பொதுநலவாய அரசதலைவர்கள் மாநாட்டில் கலந்துகொள்ள முடிவெடுத்திருக்கிறார். இப்போதும்கூட அவரை இலங்கை செல்லவிடாது தடுப்பதற்கான அரசியற் செயற்பாடுகள் அங்கே முனைப்புடன் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. எவ்வாறாயினும் பிரிட்டன் பிரதமரின் முடிவுகூட இலங்கைக்குச் சந்தோசமானதாக இருக்கவில்லை. அதற்குக் காரணம், பொதுநலவாய மேடையை இலங்கையின் மனித உரி மை மீறல்கள் பற்றிய விடயங்களை அம்பலத்துக்குக் கொண்டுவருவதற்கான இடமாகப் பயன்படுத்தப் போகிறேன் என்று அவர் சொன்னதுதான்.

அதற்கான மேடையல்ல இது. பிரிட்டன் பிரதமரின் எண்ணம் பிழையானது. பொதுநலவாயத்தின் நோக்கத்தைத் திசைதிருப்ப அனுமதிக்க முடியாது என்றெல்லாம் இலங்கை சீறிப் பாய்ந்திருக்கிறது. அவ்வாறு மனித உரிமைகள் மீறல்கள் தொடர் பாகப் பேசப்பட்டால் அதற்குப் பதிலடி கொடுக்க இலங்கையால்




# மாவீரர் நாள் தொடர்பாக அவுஸ்திரேலிய தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் வேண்டுதல்

### மாவீரர் குடும்பங்களின் விபரத் திரட்டு

அன்பார்ந்த எமது தமிழ் உறவுகளே,

தமிழீழ விடுதலைக்காக தம்முயிரை அர்ப்பணித்துப் போராடி வீரச்சாவடைந்த மாவீரர்களை எழுச்சியுடன் நினைவுகொள்ளும் தேசிய நினைவெழுச்சிநாள் ஏற்பாடுகள் தமிழர்கள் வாழும் அனைத்து நாடுகளிலும் நடைபெற்று வருகின்றன.

அவ்வகையில் அவுஸ்திரேலிய நாட்டிலும், 2013 ஆம் ஆண்டு மாவீரர் நினைவு நாள் நிகழ்வுகள் நவம்பர் மாதம் 27 ஆம் நாள் புதன்கிழமை அன்று அனைத்து மாநிலங்களிலும் நடைபெறவிருக்கின்ற நிலையில், அவுஸ்திரேலியாவில் வாழும் மாவீரர் குடும்பங்கள் அல்லது உரித்துடையோர் தமிழர் ஒருங்கிணைப்புக்குழுவினரைத் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகிறார்கள்.

எதிர்வரும் மாவீரர் நாள் நிகழ்வுகளை முன்னிட்டு மாவீரர் குடும்பத்தினரின் விபரங்களைத் திரட்டும் பணியை விக்ரோறியா, நியு சவுத் வேல்ஸ் மாநில தமிழர் ஒருங்கிணைப்புக்குழுவினர் மேற்கொண்டுள்ளனர்.

இதுவரை தமிழர் ஒருங்கிணைப்புக்குழுவின் விபரப்பட்டியலில் இல்லாத மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள், குறிப்பாக அண்மையில் அவுஸ்திரேலியாவுக்குக் குடிபுகுந்தவர்கள் தயவு செய்து தமது விபரங்களைத் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவினருடன் பகிர்ந்துகொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம். மாவீரர் நாள் நிகழ்வில் தங்கள் குடும்பத்தைச் சேர்ந்த மாவீரரின் திருவுருவப் படத்திற்கு விளங்கேற்றும் நிகழ்வுக்கான ஒழுங்குபடுத்தல்களைச் செய்யவே இவ்விபரத் திரட்டு நடைபெறுகின்றது.

விக்டோரியவில் வாழும் மாவீரர் குடும்பங்களை சேர்ந்தோர் அல்லது உரித்துடையோர் 0400804253 என்ற தொலைபேசி எண்ணில் திரு. நந்தகுமார் அவர்களையும் நியு சவுத் வேல்சில் வாழ்வோர் 0469089883 என்ற எண்ணிலும் தொடர்புகொள்ளவும்.

### காந்தள் மலருக்கான ஆக்கங்கள் வேண்டுகை

அன்பார்ந்த எமது தமிழ் உறவுகளே,

கடந்த ஆண்டுகளில் மாவீரர் நாள் நினைவாக 'காந்தள்' என்ற பெயரில் மாவீரர் தொடர்பான படைப்புக்களைத் தாங்கிய இதழ் வெளியிடப்பட்டது. அவ்வாறு இவ்வாண்டும் காந்தள் மலர் வெளியிடப்படவுள்ளதால் மாவீரர் தொடர்பான படைப்புக்கள் எம்மால் எதிர்பார்க்கப்படுகின்றன. படைப்புக்களை அனுப்ப விரும்புவோர் மாவீரர் தொடர்பான கவிதைகள், கட்டுரைகள், சிறு கதைகள் என்பவற்றை தட்டச்சி kaanthalbook@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு எதிர்வரும் 12/11/2013 இற்கு முன்னதாக அனுப்புமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

### காந்தள் மலருக்கான நன்கொடை வேண்டுகை

அன்பார்ந்த எமது தமிழ் உறவுகளே,

கடந்த ஆண்டைப்போல் இம்முறையும் காந்தள் மலர் மாவீரர் நாளையொட்டி வெளியிடப்படவிருக்கின்றது. இம்மலருக்கான விளம் பர நன்கொடைகளைத்தங்களிடமிருந்து எதிர்பார்க்கின்றோம். இவ்விளம்பர நன்கொடைகளால் திரட்டப்படும் நிதி தாயகத்திலுள்ள மாவீரர் குடும்பங்களின் வாழ்வாதாரத் தேவைகளை நிறைவுசெய்யப் பயன்படுத்தப்படும்.

**விளம்பர நன்கொடை விபரம்:**

முழுப்பக்கம்: $300.00
அரைப்பக்கம்: $200.00
காற்பக்கம்: $100.00

விளம்பரங்கள் தொடர்பாக தமிழர் ஒருங்கிணைப்புக்குழுவினருடன் தொடர்பு கொள்ளவும். விளம்பரக் கோப்புக்களை kaanthalbook@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு எதிர்வரும் 12/11/2013 இற்கு முன்னதாக அனுப்பு மாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

நன்றி

**தமிழர் ஒருங்கிணைப்புக்குழு**

# MKS Spices'n Things

ஆதரவில்

# புலரும் பூபாளம் 2013



## மாபெரும் கலைத் திருவிழாவும் இராப்போசன விருந்தும்

கிளிநொச்சி மகாதேவ ஆச்சிரமத்தின்
சிறுவர் இல்ல நிதியுதவி நிகழ்ச்சி

**வெவ்வேறு கலைஞர்களின் வித்தியாசமான பல்சுவை கலைகள்!**

**மெல்பேணின் பிரபல்யமான உணவகங்களின் அறுசுவை உண்டிப் படையல்!**

அரிய கலை நிகழ்ச்சிகளை கண்டு இரசித்திடவும்,
அறுசுவை உணவுகளை உண்டு உருசித்திடவும்,
ஆதரவற்ற குழந்தைகளுக்கு உதவிய திருப்தியில் இலயித்திடவும்
அற்புதமானதொரு வாய்ப்பு

காலம் : 1 டிசம்பர் ஞாயிற்றுக்கிழமை 2013
நேரம் : மாலை 5.00 மணி
இடம் : ஸ்பிறிங்வேல் நகர மண்டபம்

அனைவரும் வருக ஆதரவு தருக
மேலதிக விபரங்களுக்கு

திரு ப. நவனீதராஜா - 0403 290 286
எஸ். ஈசானந்தன் - 0425 844 123
வீ. சுப்பிரமணியம் - 03 82881748
என்.கந்தசாமி - 0466 110 016

## Art festival and Dinner

Kilinochi Mahadeva Ashram for Kids invites you to their fund raising programme.


**Come and enjoy the different art forms by renowned artistes... and treat your taste buds to a variety of dishes from various hotels of Melbourne.**

A great opportunity to eat, enjoy and donate to your heart's content......

Date: 1st December Sunday 2013 Time : 5pm
Springvale Town Hall, Springvale VIC- 3171

Expecting your participation and kindness in donating liberally.......

For further details please contact
P. Navaneetharajah - 0403 290 286
S.Ishaanandan - 0425 844 123
V. Subramaniam - 03 82881748
N.Kandasamy -0466 110 016



# Pularum Poopaalam 2013

ஆச்சிரமத்தின் தொடர்புகளுக்கு
திரு. இராசநாயகம் தலைவர் (முன்னாள் கிளிநொச்சி அரசாங்க அதிபர்)
94 21 4923118, 94 770604950
திரு. வேலாயுதம் முகாமையாளர் 94 778042508



# மாவீரர் நினைவுகளை விழுங்க முடியுமா?



**இளையபல்லவன்**

அண்மையில் வெளிநாட்டில் இருந்து நண்பர் ஒருவர் வந்திருந்தார்.

மற்றவர்களைப் போலவே அவருக்கும் தன் நினைவில் வருகின்ற - பசுமையான கடந்த காலத்தை இரைமீட்டுகின்ற- இடங்களைச் சுற்றிப்பார்க்கப் புறப்பட்டார். அவர் வெளி நாட்டுக்குப் போகமுன்னர் இருந்ததைவிடவும் ஊர் நிறையவே மாறியிருந்தது. வந்தவருக்கு ஏமாற்றம். நண்பர்களோடு இருந்து 'பம்பலடித்த' மடத்தடி, அதனருகே நின்றிருந்த ஆவுரஞ்சிக்கல், துரையரின் பழைய நாற்சார் வீடு, இவை-களோடு போரில் இறந்து போன அவரின் தம்பியின் உடலம் புதைக்கப்பட்டிருந்த துயிலும் இல்லம் என்பனவெல்லாம் இருந்த இடம் தெரியாமல் உருமாறியிருந்தன.வீதி அகலிப்பு என்ற பெயரிலும், அபிவிருத்தி என்ற பெயரிலும் எங்களின் இருப்பியல் தொன்மைகளையும் வரலாறுகளையும் சொல்லிநிற்கின்ற சின்னங்கள் பலவும் இவ்வாறு மறையத்தொடங்கியுள்ளன.

குறிப்பாக போர் முடிவுக்கு வந்தபின்னர் படைத்தரப்புக்கு பெரிதாக வேலையெதுவும் இருக்கவில்லை. சும்மா இருப்ப வர்களுக்கு ஏதாவது வேலை கொடுத்தாக வேண்டுமல்லவா? எனவே அரச இயந்திரத்தின் அடுத்த கட்ட தாக்குதல் வரலாற் றினை அழித்தலாக இருந்தது. படைகள் எல்லாத் திசைகளிலும் ஏவிவிடப்பட்டன. வடக்கு, கிழக்குப் பகுதிகளில் இருந்த மாவீரர் மயானங்களே இந்தத் தாக்குதலில் முதல் குறியாக இருந்தன. புல்டோசர்கள் மூலம் உழப்பட்ட மயாங்களில் இருந்த மண் அங்கிருக்கக்கூடாது என்ற எண்ணத்தில் இரவோடிரவாக 'ட்ரக்ரர்களில்' ஏற்றிச்செல்லப்பட்டன.வீதிப்புனரமைப்புக்கென கொட்டப்பட்ட மண்குவியல்களில் சிதைந்து போன எலும்புகளும், துண்டு துண்டாக புலிச்சீருடைகளும் தென்பட்ட மர்மத்தின் காரணம் இதுதான். சாவின் பின்னரும் இறந்தவர்களை ஆறடி மண்ணில் நிம்மதியாகத் தூங்க விடாது செய்கின்ற காரியத்தை, கண்டும் காணாதது போல இருப்பதைத் தவிர மக்களுக்கு வேறுதெரிவுகள் எதுவும் இருக்கவில்லை.

அழிக்கப்பட்ட மயானங்களை அப்படியே விட்டு வைத்தால் பின்னொருகாலத்தில் அவை மீளவும் முளைத்தெழுந்துவிடுமோ என்ற அச்சத்தில், துயிலும் இல் லங்களில் இராணுவப்படைப்பிரி வுகளின் பாரிய முகாம்கள் அமைக்கப்பட்டன. கோப்பாய், கொடிகாமம், எல்லங்குளம் போன்ற துயிலும் இல்லங்கள் இவ்வாறு படைதளங்களாக்கப்பட்டுள்ளன. அப்படியும் வெறி அடங்கவில்லை. போராட்டகாலத்தில் புலிகளால் அமைக்கப்பட்ட நினைவுத்தூபிகள் 'இனம்தெரியாதவர்களால்' பகிரங்கமாக இரவுவேளைகளில் இடித்தழிக்கப்பட்டன.(நல்லவேளையாக அப்போது 'கிறீஸ்' பூதங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கவில்லை. இல்லாவிட்டால் இந்தத்தூபிகளை கிறீஸ்பூதங்கள்தான் தாக்கியழித்தாகச் சொல்லப்பட்டிருக்கும்)

வடமராட்சிப்பகுதிக்குச் செல்லும் தென்னிலங்கைப் பயணிகள், புலிகளின் தலைவர் பிரபாகரனின் இல்லத்தை பார்வையிடுவதும் அவரின் வீட்டிலிருந்து ஒருபிடி மண்ணை எடுத்துச் செல்வதுவும் வழமையான ஒன்று.இப்படியே விட்டால் புலிகளின் தலைவர் சிங்களமக்கள் மத்தியிலும் ஒரு 'ஹீரோ' வாக மாறிவிடலாம் என்ற பயத்தில், அந்த வீட்டையும் தம் கனரக வாகனங்கள் மூலம் இனந்தெரியாதவர்கள் இடித்துத்தள்ளினார்கள். (இனந்தெரியாத நபர்கள் கனரக வாகனங்களில் வந்து, சர்வசாதரணமாக ஒரு கட்டடத்தை யாருடைய இடையூறுமின்றி இடித்துத் தள்ளிவிட்டு, முழத்துக்கு முழம் இருக்கும் இராணுவக் காவலரண்களை தாண்டிச் செல்லும் அதிசயம் இலங்கையில் மட்டுமே நடக்கக் கூடியது.)

அதன் பின்னர் அடங்கிக் கிடந்த பேரினப்பூதங்கள் வடக்குத்தேர்தலின் தோல்வியோடு ,மீண்டும் வாயை அகலத்திறந்தபடி விழித்துக் கொண்டன. அவற்றின் முதல் விழுங்குகை தலைவர் பிரபாகரனின் புதுக்குடியிருப்பு வீடாக இருந்தது. சரி, மீண்டும் பிரபாகரனின் ஆவி தங்களை கொல்ல வந்துவிடுமென்ற அச்சத்தில் அவர்கள் அப்படிச் செய்துவிட்டார்கள் என்று விட்டார்கள் போலும் என்று சும்மாயிருக்க முடியவில்லை. ஏனெனில் அந்தப்பூதங்கள் ஏற்கனவே தாம் கிண்டிக் கிளறி தம் வித்தையைக் காட்டியிருந்த மாவீரர் துயிலுமில்லங்களை நோக்கி நாக்கை மீண்டும் நீட்டின.

மாகாணசபைத்தேர்தலுக்கான பிரசாரத்தின் போது, மாவீரர் துயிலுமில்லங்களை மீள அமைப்போம் என்று கூட்டமைப்பினர் சொல்லியிருந்தனர்.தேர்தலின் பின்னர் மாகாணசபைக்கு தெரிவானவர்கள் அதை மறந்தாலும் கூட பிரதேச சபையில் உள்ள கூட்டமைப்பு உறுப்பினர்கள் மறக்கவில்லை.சாவகச்சேரி நகர சபையிலும், கரைச்சி பிர தேசசபையிலும் மாவீரர் துயிலுமில்லங்களைப் புனரமைப்பது குறித்த தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. ஆனால் அதனை பேரினப்பூதங்கள் எப்படியோ மோப்பம் பிடித்து விட்டன. இவர்கள் சிரமதானத்துக்கு செல்லமுதலே பூதங்கள் துயிலுமில்லங்களில் முகாமிட்டுவிட்டன.சுற்றிவர முட்கம்பி வேலி அடித்து, கனரக வாகனங்களால் கல்லறைப்பூமியை உழுது, குந்திக்கொண்டன பூதங்கள். கொட்டும் மழைக்குள்ளும் கூடாரங்களை அடித்து மறவர்கள் துயிலும் பூமியை தங்கள் இருப்பிடமாக்க முனைந்து கொண்டிருக்கிறார்கள் . இதன் மூலம் இந்தமுறை மாவீரர் நாளுக்கு தீபமேற்ற எந்த மாவீரர் மயானமும் மிச்சமில்லை என்று அவர்கள் எக்காளமிடக்கூடும்.

எனினும் ஞாபகங்களை விழுங்குதல் என்னும்விடயத்தில் எந்தவொரு அதிகாரமும் இதுவரை வெற்றிபெற்றதாக வரலாறில்லை. கட்டடங்க்ளையும் சின்னங்களையும் இடிக்க இடிக்க அவை விஸ்வஷரூபமாக எழும் என்பதே யதார்த்தம். கார்த்திகை தீபங்களின் மாதம். மக்கள் மனமென்ற துயிலுமில்லத்தில் பேருருக்கொண்டு ஒளி வடிவில் எழுவர் மாவீரர்கள்.





# புலி போல வருமா?

## தாயகத்திலிருந்து ஔண்யன்

சிங்கத்துக்கு மனமில்லாவிட்டாலும் அந்தப்போட்டியை நடத்தியேயாக வேண்டும். இல்லாவிட்டால் பக்கத்துக்கு காட்டிலிருக்கும் கரடிகள், ஆற்று நீரை அணை போட்டுக் கட்டிவிடும். பிறகு சிங்கத்தின் ஆட்சியிலிருக்கும் காட்டில் இன்னும் வறட்சி வந்துவிடும். ஏற்கனவே காட்டிலுள்ள மரங்கள் எல்லாம் கருகத்தொடங்கியிருந்தன. காட்டில் இருந்த நதிகள் எல்லாம் காய்ந்து கிடந்தன. அவை பாளம், பாளமாக வெடித்துகிடக்கும் மண் கட்டிகளையே சுமந்து கொண்டு தாகத்தோடு மழைக்காகக் காத்துக்கிடந்தன.

குழாய் மூலம் அடிக்கடி வந்து கொண்டிருந்த தண்ணீரையும் உரிமையோடு கேட்கமுடியாது. புலிக்கு பொறிக்கிடங்கு வைப்பதற்காக தேவைக்கு அதிகமா-கவே குழாய்த்தண்ணீரை உறிஞ்சி எடுத்துவிட்டதால், இப்போதெல்லாம் சுழற்சி அடிப்படையிலேயே குழாய்நீரும் மருந்து போலக் கிடைத்துக் கொண்டிருந்தது. எப்படியும் தண்ணீர் வேண்டும். அதற்கு இந்த ஓட்டப்போட்டியை வைத்துத் தான் ஆகவேண்டும். இல்லாவிட்டால் கரடிகளுக்கு கோபம் வந்துவிடும்.

மற்றப்போட்டிகள் என்றால் சிங்கம் தன் அடிப்பொடிகளை வைத்து இலகுவாக வென்றுவிடும். ஆனால் இது ஓட்டப்போட்டி. அதில் வெல்லப்போவது யார்? என்று கேட்டால் , காட்டில் உள்ள விலங்குகள் எல்லாம் கண்ணை மூடிக்கொண்டு, “முயல்தான் வெல்லும்” என்று சொல்லுமளவுக்கு அதன் ஓட்டத்திறன் உலகப்பிரசித்தம்.

எப்போதும் ஓட்டத்தில் புலிதான் முதல்வன். ஆனால் வேட்டையாடும் அதன் பண்பு கரடிக்காட்டாருக்கு பிடிக்கவில்லை. புலியின் இந்த வேட்டைக்குணம் கொண்ட விலங்குகள் தமது காட்டுக்குள்ளும் உருவாகிவிடக்கூடாது, என்பதற்காக புலியின் நடமாட்டத்துக்கு தடை போட்டார்கள். “மச்சத்தை தின்னும் புலி ஓட்டப்போட்டியில் கலந்து கொள்வது சட்டவிரோதமானது ” என்று புதிய சட்டவிதிகள் கொண்டுவரப்பட்டன. இந்த நிலையில்தான் தன் பகுதிக்குள் இருந்த முயலை தன் சார்பாக ஓட்டப்போட்டியில் கலந்து கொள்ளவைப்பதென முடிவெடுத்தார்கள்.

காட்டுக்குள் நடைபெறும் ஓட்டப்போட்டி அவ்வளவு இலேசானது அல்ல. தனியே ஓட்டத்திறன் இருந்தால் மட்டும் வெல்லமுடியாது. அதன் வளைவு நெளிவுகள் எல்லாம் அத்துப்படியாகியிருக்க வேண்டும். ஒவ்வொரு முடுக்கிலும் வைக்கப்பட்டிருக்கும் பொறிக்கிடங்குகளில் இருந்து தப்பிக்க வேண்டும். ஆனால் அவை எங்கெங்கு உள்ளன என்று அடையாளம் காட்டவும், ஓடிக்கொண்டிருக்கும் போது உடலில் நீரை தெளித்து, குளுக்கோஸ் தந்து தெம்பை தரவும் காட்டு விலங்குகளின் ஒத்துழைப்பு அவசியம்.

புலிக்கு பலவற்றின் செல்வாக்கு இருந்தது. அதன் வெற்றிக்கு இதுவும் ஒரு காரணம். இப்போது தன் சார்பாக ஓட்டப்போட்டியில் கலந்து கொள்ளவுள்ள முயலுக் கும் காட்டுவிலங்குகள் ஆதர வளிக்க வேண்டும் என்று புலி கேட்டுக்கொண்டது.

அதன்படி புலியின் பிரதிநிதிக்கும் புலிக்கு வழங்கிய அதே ஆதரவு கிடைத்ததாலேயே முன்னைய ஓட்டப்போட்டிகளில் வெல்ல முடிந்தது. இடையில் சில தில்லுமுல்லுகள். பக்கத்துக்காட்டாரின் ஒத்துழைப்போடு ஒரு நீர்குழியில் புலியை வீழ்த்தி, இரகசிய-மாக அதன் கதையை முடக்கியது சிங்கம். அதன் பின்னர் காட்டு விலங்குகள் முயலின் வடிவத்தில் தான் புலியைக் கண்டு வந்தார்கள். புலிக்கு கொடுத்த மதிப்பையும் மரியாதையையும் அதற்கு வழங்கினார்கள்.

ஆனால் இந்த மரியாதை எல்லாம் தனது திறமை காரண-மாகவே கிடைக்கின்றன என்றெண்ணி முயலுக்கு கர்வம் வந்திருந்தது. படுத்தபடியே வெல்லலாம் என்ற நினைப்பு இதன் மூலம் சிலவேளை வருவதுண்டு. எனினும் அது என்னதான் கூத்தடித்தாலும், காட்டு விலங்குகள் முயலைப் புலியாகவே தம் மனதுக்குள் எண்ணினார்கள். முயல் தோற்பது புலி தோற்றதுக்குச் சமன் என்ற நினைப்புக் காரணமாக தமது முழு ஆதரவையும் முயலின் வெற்றிக்காக கொட்டிவிடத்தயாராக இருந்தனர்.

இதனால் இனிவரும் ஓட்டப்போட்டியில் என்னதான் தலை கீழாக நின்றாலும் முயலே வென்றுவிடும் நிலை இருந்தது. இப்போது நடக்கப்போகும் ஓட்டப்போட்டி வித்தியாசமானது. நேரடியாக புலி களத்தில் இல்லாதபோது நடைபெறும் போட்டி.

எட்டுத்திக்கும் தலைவணங்காக் காட்டுராஜாவான தனக்கு தலைக்குனிவு வந்துவிடக்கூடாது என்பதற்காகவே இந்த ஓட்டப்போட்டியை நடத்தாமல் தகிடுதத்தங்கள் செய்து கொண்டிருந்தது. சில சமயங்களில் பக்கத்துக்காட்டுக் கரடி-கள் வரும்போது, ஒப்புக்காக “விரைவில் எதிர்பாருங்கள், மாபெரும் ஓட்டப்போட்டி’ என்ற நோட்டீஸ் காட்டு மரங்களை அலங்கரிக்கும். ஆனால் அதன் பின்னர் அந்த நோட்டீஸ் அறிவிப்பை சிங்கம் மறந்தே போய்விடும்.

பின்னர் கரடிகளின் மாநாடுகளில் ‘என்னத்துக்காண்டி இன்னும் ஓட்டப்போட்டி வைக்கேலை?’ என்று அவைகள் நாக்கைப் பிடுங்கிற மாதிரிக் கேட்கும் போதுதான் சிங்கத்துக்கு போட்டி வைக்க வேண்டுமென்ற நினைப்பே வரும். அதையும் ஏதாவது தலையைச் சொறிந்து சமாளிப்பதில் சிங்கராஜா கெட்டிக்காரன்.

ஆனால் இப்போது வெள்ளம் தலைக்கு மேல் போய்விடும் நிலை. எப்படியும் வைத்துதான் ஆகவேண்டும். இல்லாவிட்டால் சொட்டுத்தண்ணீர் கூட கிடைக்காது.

போட்டிக்கு நாள் குறித்தாயிற்று. சிங்கம் தன் அடிப்பொடிகளான ஆமைகளையும் நரிகளையும், ஓநாய் களையும்அழைத்தது.

அவை முயல் வருத்தமாயிருந்த காலத்திலும், முயல் தூங் கிய போதிலும் அல்லது முயலை சிங்கராஜா வெருட்டி ஓடவிடா மல் செய்த போதும் ஓட்டப்போட்டியில் பரிசு பெற்றிருந்தன.

“உங்களை நம்பித்தான் இந்த ஓட்டப்போட்டிக்கு ஒழுங்கு செய்திருக்கிறன். எப்பிடியாவது, என்ன செய்தாவது போட்டியில வெண்டு போடுங்கோ. தோத்தால் முயல் தரப்பிட்ட வடக்கு காட்டை குடுக்க வேண்டியிருக்கும்” என்று சிங்கம் கெஞ்சியது.

“நீங்கள் எங்களை என்னெண்டு நினைச்சுப்போட்டியள். போனமுறை வெண்டமாதிரி இந்தமுறையும் வெல்லுவம். விலங்குகள் இப்ப புலியை மறந்திட்டுதுகள். நாங்கள் காட்டுக்க புதிசா றோட்டுகள் போட்டிருக்கிறம். கறண்ட் எல்லாம் எடுத்துக் குடுத்திருக்கிறம். மஞ்சள், கறுப்பு எண்டு புலியை நினைவு படுத்துற எல்லாத்தையும் அழிச்சும் போட்டம். அதால கட்டாயம் வெல்லலாம்” - என்றது ஆமை.

நரியும் சும்மாயிருக்கவில்லை. “கிட்டத்தட்ட நானும், ஓநா யும் புலியின்ர ‘ஷேப்பில’ இருக்கிற படியால புலியை நினைக்கிற விலங்குகள் கூட எங்களுக்குத்தான் சப்போர்ட் பண்ணுங்கள்” என்று தொடையைத்தட்டியவாறு சொன்னது.

சிங்கத்துக்கு அவற்றின் சொல்லில் நம்பிக்கையில்லா விட்டாலும், தோற்றாலும் கௌரவமாகத் தோற்கலாம் என்ற எண்ணம் பிறந்தது.

போட்டிக்கான முன்னாயத்தங்கள் அறம்புறமாக நடந்து கொண்டிருந்தன. வழக்கம் போல தானே வெல்வேன் என்ற ‘கெப்பறோடு’ விலங்குகளிடம் ஆதரவு கேட்டுச் சென்ற முயலை எந்தவிலங்கும் பெரிதாகக் கண்டுகொள்ளவில்லை.

‘சிலவேளைகளில் தோற்றுவிடுவோமோ” என்று அதற்குள் பயம் வரத்தொடங்கியது. ஏனெனில் உண்மையில் நரிகளும், ஓநாய்களும் கூட ஓட்டத்தில் கெட்டித்தனமானவைதான். ஆனால் விலங்குகளின் ஆதரவு மட்டும் அவற்றுக்கு அற வேயில்லை. எனவே விலங்குகளின் ஆதரவை எப்படியாவது பெற்றுவிட முயல் துடித்தது.

‘உண்மையில் புலியின் பிரதிநிதி நான் என்பதை மீண்டும் ஞாபகமூட்டினால் மட்டுமே வெல்ல ஏதாவது வழி கிடைக்கும்’ என்ற முடிவுக்கு முயல் வந்தது.

மஞ்சள் வர்ணத்தை எடுத்து தன் உடலில் பூசி, கரியால் இடையிடையே சில கோடுகளை வரைந்தது. ஓரளவுக்கு தன் குரலை மாற்றி உறுமுவது போல ஒலியெழுப்பியது. போதாக்குறைக்கு ஒரு மஞ்சள் நிற வாலையும் பின்பக்க மாகச் செருகிக்கொண்டது. அடிக்கடி புலி சொல்லும் வசனங் களைத்தானும் உச்சரிக்கத் தொடங்கியது.

“இன்னும் கொஞ்சக்காலத்தில் நானும் புலியாக மாறிவிடு வேன். உங்களுக்கு சிங்கத்தால் எந்தப்பிரச்சினையும் வராமல் பாதுகாப்பேன்’ என்றும் அது உறுதி கொடுத்தது. கிட்டத்தட்ட புலி-யைப் போன்ற ஒப்பனையுடன் அது காட்டை வளைய வந்தது.

விலங்குகள் அதன்சிறுபிள்ளைத்தனமான விளையாட்டை ரசித்தனர். சிலவேளைகளில் ஓட்டப்போட்டியில் வென்றால் அது சொல்வது போன்று புலியாக மாறிவிடக்கூடும் என்று அவை மெல்ல மெல்ல நம்பத்தொடங்கின. மீண்டும் புலி பற்றிய விம்பங்களும், சிங்கத்தின் பிடியில் இருந்து மீள்வது பற்றிய கனவுகளும் முளைக்கத் தொடங்கின.

போட்டி தொடங்கியது.

எல்லா வழமையாகவே ஓட்டப்போட்டியென்றால் குகைக ளுக்குள் அடைந்து கிடக்கும் விலங்குகள் கூட அன்றைக்குப் போட்டியைக் காண வந்ததால் மைதானத்தில் இருக்க நிற்க இடமில்லை. அவை முயல் புலியாக உருமாறு வதற்கு இந்தப்போட்டியே மந்திரக்கோலாக இருக்கும் என்று நினைத் தன.

எல்லா விலங்குகளும் புலியின் நாமத்தை உச்சாடனம் செய்துகொண்டு, முயலுக்கு வழிகாட்டின. வழமையை விடவும் மிகக்குறைந்த நேரத்தில், சாதனையோடு வென்றது முயல். ஆமைகளும், நரிகளும், ஓநாய்களும் இரண்டாமிடத்துக்கு கூட தகுதியற்ற வெற்றியையே பெறமுடிந்தது.

“நான் ஒருபோதும் இந்தபோட்டியில் வென்றதற்கான சம்பியன் கிண்ணத்தை சிங்கத்தின் அடுப்படிக்குள் சென்று வாங்க மாட்டேன்” என்றும் அது அறைகூவியது. விலங்குகள் மீண்டும் புலி உருவாகும் கனவில் மிதக்கத்தொடங்கின.

ஆனால் சாதனை மகுடம் சூடப்பட்டவுடனேயே முயலின் மனதில் இருந்த புலி பற்றிய கனவுகள் மறைந்தேபோய்விட்டன.

தன் உடலில் இருந்த மஞ்சள் வர்ணமும், கறுப்பு வரிகளும் அதற்கு இப்போது அருவருப்பானவை போல தென்பட்டன.

“எவ்வளவுகாலம் தான் இப்படியே ஓடி வென்றதும் சம்பி யனை வாங்காமல் விடுவது? இந்த முறை சிங்கத்தின் அடுப் பங்கரைக்கு போய் அதனை வாங்கி வந்து, எனது வளை யின் முன்பக்கத்தில் கொழுவினால், எவ்வளவு வடிவாக இருக்கும். அத்தோடு சம்பியன் கிண்ணத்திலும் என் பெயர் பொறிக்கப்படும்” என்ற ஆசை அதற்கு மெல்லத்துளிர் விடத்தொடங்கியது.

முயல் கட்டியிருந்த புலிவால் அநாதரவாக ஆற்றங்கரையில் இருப்பதாக யாரோ சொன்னார்கள். ஆனால் விலங்குகள் அப்போதும் முயலைச் சந்தேகப்படவில்லை. அதன்பின்னர் அதன் உடலில் இருந்த மஞ்சள் வர்ணமும், வரிக்கோடுகளும் மறையத்தொடங்கிய போதுதான், அவை கொஞ்சம் விழித்துக் கொண்டன. அப்படி விழிப்படைந்த ஒருநாளில்,

“நாளை முயலார் சிங்கராசாவின் அடுப்பங்கரைக்கு வந்து சம்பியனைப் பெற்றுக் கொள்வார்” என்று சேவல் காடு முழுக்க கொக்கரித்து, தகவல் சொன்னது. விலங்குகள் கொதித்தெழுந்தன.

“புலி பசித்தாலும் அடுப்பங்கரைக்கு போவதில்லை” என்று அவை முயலின் செயலுக்கு தடை போடமுனைந்தன. ஆனால் அதற்கு முயல் சொன்னது,

“நெடுகச் சிங்கத்தோட கொளுவிக்கொண்டிருக்காமல் ஒரு நல்லெண்ணமா அங்க போய் சம்பியனை வாங்குவம். இதெல்லாம் ஒரு இராஜ தந்திரம். அப்பிடி அங்க போய் வாங்கின நம்பி சிங்கம் சைலண்டா இருக்கேக்க நான் புலியாய் மாறிடு வன்”

ஆனால் முயலின் இந்த வார்த்தைகளை விலங்குகள் நம்பவேயில்லை. ஏனெனில் சிங்கம் தன் வலையில் மற்ற விலங்குகளை வீழ்த்துவதில் கில்லாடி. யானையைக் கூட ஒரு ‘பிளேன் கோப்பியை’ கொடுத்து மடக்கிய கெட்டிக்காரன். அதனால் சிங்கத்தின் அடுப்பங்கரைக்கு சென்றால் முயல் பூனையாகி விடுமே தவிர புலியாகிவிடாது என்பது விலங்கு களுக்கு நன்றாகத் தெரிந்திருந்தன.

ஆனால் சம்பியன் கிண்ணத்தின் மீதான ஆசையும். சிங்கத்தின் விருந்தில் கலந்துகொள்ளவேண்டுமென்ற ஆவலும் விலங்குகளின் வேண்டுகோளை புறக்கணிக்கச் செய்யுமளவுக்கு முயலின் காதுகளையும் கண்ணையும் மறைத்தன. கடைசியில் தன்னை வெல்ல வைத்தவர்களின் வார்த்தைகளை மிதித்துக் கொண்டு அடுப்பங்கரைக்கு போனது முயல். சம்பியனை அது வாங்கும் போது, பளிச்சிட்ட கமெராக்களின் ஒளியிலும், அதற்குப் பின் நடந்த ‘பார்ட்டியில்’ பரிமாறப்பட்ட உணவுகளின் ருசியிலும் தன்னை மறந்தது முயல். தன்னை மறந்தால் பரவாயில்லை வென்றதற்கான சான்றிதழையும் வாங்க அது மறந்துவிட்டது.

ஆனால் சான்றிதழ் தானே வெற்றிக்கான ஆதாரம் . அதை வாங்காமல் எப்படி இருப்பது? சூடு கண்ட பூனைதான் அடுப்பங்கரையை நாடாது. இது ருசி கண்ட முயல் அல்லவா. ஆகவே அடுப்பங்கரைக்கு மீண்டும் போக முயல் ஆசைப்பட்டது.

“சம்பியன் வாங்கும்போது பெறத்தவறிய சான்றிதழை சிங்கராசா இன்று முயலுக்கு வழங்கிக் கௌரவிப்பார்”


மீண்டும் ஒருமுறை சேவலின் கொக்கரிப்புடனான அறிவிப்பைக் கேட்ட விலங்குகளுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை.

அடுப்பங்கரையில் சிங்கத்தின் விருந்தோம்பலில் சான்றிதழோடு தன்னை மறந்து மகிழ்ச்சிக்கடலில் குதிக்கும் முயலின் முதுகில் சிங்கத்தை நினைவூட்டும் பழுப்பு நிறமும், தாடி போன்ற முகரோமமும் முயலிடம் ஒட்டியிருந்ததைக் காணமுடிந்தது.

“நாங்கள் முயல் கெதியில புலியாகிவிடும் எண்டு நினைச்சம். அதென்னெண்டா சிங்கமாயெல்லோ மாறுது. முயல் இந்த முறையும் எதையாவது வாங்க மறந்து போய் வந்திருக்கும், அதைச்சாட்டிக் கொண்டு மூண்டாவது முறை யாவும் அது சிங்கத்தின் அடுப்பங்கரைக்கு போகும். அப்பவும் எதையாவது மறந்திட்டு திரும்பப் போக வழி பாக்கும்” என்று விலங்குகள் தம்மைத் தாமே நொந்துகொண்டு புலியின் வருகைக்காக காத்திருக்கத் தொடங்குகின்றன.



# விடுதலைக்காகப் போராடிய வீரஞ்செறிந்த கெதார் இயக்கம்



பிரிட்டிஷ் காலனியாக்கத்துக்கு எதிரான நாட்டு விடுதலைப் போரில் புரட்சிகர அத்தியாயமாகத் திகழும் வீரஞ்செறிந்த கெதார் இயக்கத்தின் நிறுவனர்களுள் ஒருவரான லாலா ஹர்தயாள்

பிரிட்டிஷ் காலனியாதிக்கத்துக்கு எதிரான இந்திய விடுதலைப் போரின் வரலாற்றில் போர்க்குணம் ததும்பும் அத்தியாயத்தைக் கொண்டது கெதார் இயக்கம். அமெரிக்கா மற்றும் கனடாவில் குடியேறிய இந்தியர்களால் தொடங்கப்பட்டு, இந்தியாவில், குறிப்பாக பஞ்சாபில் பற்றிப் பரவிய மதச்சார்பற்ற, நாட்டு விடுதலைக்கான இயக்கம்தான் கெதார் இயக்கம். காலனியாதிக்கத்துக்கு எதிரான போராட்டத்தில் அடக்குமுறைகளைத் துச்சமாக மதித்து, தமது இன்னுயிரையும் ஈந்த முன்னுதாரணமிக்க தியாகிகளைக் கொண்டதுதான் கெதார் இயக்கம். 1913-இல் தொடங்கப்பட்ட அப்புரட்சிகர இயக்கத்தின் நூற்றாண்டு விழா நாடெங்கும் கொண்டாடப்பட்டு வருகிறது.

அன்றைய பிரிட்டிஷ் காலனிய ஆட்சியில் நிலவிய பொருளா-தார மந்தத்தினால் பாதிப்புக்குள்ளான பஞ்சாபியர்கள், 1900-ஆம் ஆண்டுகளின் தொடக்கத்தில் சொந்த மண்ணை விட்டு வெளி யேறி புதிய வேலை வாய்ப்புகளைத் தேடி, அமெரிக்காவுக்கும் கனடாவுக்கும் ஆயிரக்கணக்கில் குடிபெயரத் தொடங்கினர். இக்குடிபெயர்ந்த இந்தியர்களின் கடின உழைப்பினால் பல்வேறு தொழிற்சாலைகளும், பெரும் விவசாயப் பண்ணைகளும் அந்நாடுகளில் பல்கிப் பெருகிய போதிலும், அவர்கள் இரண்டாம்தரக் குடிமக்களாகவே நடத்தப்பட்டனர். குடியேறிய இந்தியர்கள் ஐரோப்பிய வெள்ளையர்களுடன் கலந்துவிடாமல் தனிக் காலனிகளில் வைக்கப்பட்டதோடு, அன்றைய குடியேற்ற நாடான கனடாவின் அரசும், கனடாவின் ஒரு பிராந்தியத்தை



கனடாவில் குடியேற விடாமல் தடுக்கும் ஏகாதிபத்தியவாதி களை எதிர்த்து வான்கூவர் துறைமுகத்தில் நங்கூரமிட்டு 'காமகட்ட மாரு' கப்பலில் போராடும் இந்தியர்கள்.

தனது ஆளுகையின் கீழ் வைத்திருந்த அன்றைய வெள்ளை ஏகாதிபத்தியவாதிகளின் பிரிட்டிஷ் கொலம்பிய அரசும் நி-றவெறிக் கொள்கையுடன் இந்தியர்கள் தொடர்ந்து கனடாவில் குடியேறுவதைத் தடுத்தன.

அதே காலகட்டத்தில், காலனியாதிக்கத்தை எதிர்த்துச் செயல்பட்ட 'குற்ற'த்துக்காக இங்கிலாந்திலிருந்து நாடு கடத்தப்பட்ட லாலா ஹர்தயாள் என்ற இளம் புரட்சியாளர், அமெரிக்காவின் கலிபோர்னியா பல்கலைக்கழகத்தில் ஆசிரியராகப் பணிபுரிய வந்தார். அடிமை நாட்டினராக இருப்பதாலேயே இந்தியர்கள் இழிவாக நடத்தப்படுவதையும், தாய் நாட்டை பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திடமிருந்து விடுவிப்பதே இதற்குத் தீர்வு என்பதை உணர்த்தியும் அவரும், அப்பல்கலைக் கழகத்தில் படித்து வந்த இந்திய மாணவர்களும் பிரச்சாரத்தை மேற்கொண்டு குடியேறிய இந்தியர்களை அமைப்பாக அணிதிரட்டினர். இதன் தொடர்ச்சியாக லாலா ஹர்தயாள், பாபா சோகன் சிங் பாக்னா, பாய் பிரேமானந்த் ஆகியோரின் தலை மையில் "பசிபிக் கடலோர இந்தியர் சங்கம்" என்ற அமைப்பு, 1913-ஆம் ஆண்டு மே மாதத்தில் அமெரிக்காவில் உருவாகி யது. ஆயுதப் போராட்டத்தின் மூலம் மட்டுமே இந்திய நாட்டை விடுதலை செய்ய முடியும் என்று தீர்மானித்த இச்சங்கத்தினர், சான்பிரான்சிஸ்கோ நகரில் ஒரு கட்டிடத்தை வாங்கி, வங்கத்தில் உருவான ஆரம்பகால தலைமறைவு தேசவிடுதலை இயக்கமான "யுகாந்தர்" என்ற பெயரை அதற்குச் சூட்டி, அதை தலைமையகமாகக் கொண்டு பிரச்சாரத்தை மேற்கொண்டனர்.

1913 நவம்பர் முதல் நாளன்று இவ்வமைப்பின் சார்பில், உருது மொழியில் "கெதார்" (புரட்சி) என்ற வாரப் பத்திரிகையை வெளியிட்டனர். அதிலிருந்து இந்த அமைப்பானது "கெதார் இயக்கம்", கெதார் கட்சி" என்றழைக்கப்பட்டது. பின்னர் குர்முகி, இந்தி மற்றும் பிற இந்திய மொழிகளிலும் இப்பத்திரிகை வெளியிடப்பட்டது. "நாங்கள் சீக்கியர்களோ, இந்துக்களோ, முஸ்லிம்களோ அல்ல் நாட்டின் விடுதலையே எங்கள் மதம்" என்று கெதார் கட்சி அறிவித்தது.

அப்பத்திரிகை ஒருமுறை இவ்வாறு ஒரு அறிவிப்பை வெளியிட்டது. "தேவை: புரட்சி செய்ய விருப்பமுள்ள இளைஞர்கள் ஊதியம்: மரணம் பரிசு: வீரத்தியாகி என்ற பட்டம் ஓய்வூதியம்: இந்திய விடுதலை பணியாற்றுமிடம்: இந்தியா."

பிரிட்டிஷ் அரசின் கொடுங்கோன்மையையும், காலனியாதிக்கத்தை வீழ்த்தி ஒரு மக்கள் குடியரசை நிறுவ வேண்டியதன் அவசியத்தையும் உணர்த்திய கெதார் பத்திரிகை, உலகெங்குமுள்ள இந்தியத் தொழிலாளர்கள் மற்றும் உயர் கல்விக்காக மேலைநாடுகளுக்குச் சென்ற இளைஞர்களிடம் தீயாகப் பரவி அவர்களை உணர்வூட்டி அமைப்பாக்கியது. கெதார் இயக்கம் அயல்நாடுகளில் வாழும் இந்தியர்களிடம் விரிவடைந்த கட்டத்தில் முதல் உலகப்போர் தொடங்கியது. பிரிட்டிஷ் காலனியாதிக்கவாதிகளைத் தாக்கி விரட்டியடிக்க இதுவே சரியான தருணம் என்பதை உணர்ந்த கெதார் கட்சியினர், அதற்கான தயாரிப்புகளில் வேகமாக இறங்கினர்.

கனடாவில் இந்தியர்கள் குடியேறுவதை ஏகாதிபத்திய வாதிகள் தடுப்பதை எதிர்த்தும், குடிபெயரும் மக்களுக்கு சம உரிமை கோரியும் ஹாங்காங்கில் அப்போது வர்த்தகராக இருந்த குருதித் சிங் சர்ஹாலி என்ற நாட்டுப்பற்றாளர், குருநானக்கின் பெயரால் கப்பல் நிறுவனத்தைத் தொடங்கி, "காமகட்ட மாரு" என்ற ஜப்பானியக் கப்பலை வாடகைக்கு அமர்த்திக் கொண்டு கெதார் இயக்கத்தினர் உள்ளிட்ட இந்தியர்களை கனடாவுக்கு அழைத்துச் சென்று குடியமர்த்த முயன்றார். ஹாங்காங்கிலிருந்து 150 பயணிகளுடன் 1914, ஏப்ரல் 4-ஆம் தேதியன்று புறப்பட்ட அந்தக் கப்பல், பின்னர்



சீனாவின் ஷாங்கா, ஜப்பானின் யோகோஹமா முதலான துறைமுகங்களிலிருந்து மேலும் பல இந்தியர்கள் சேர மொத்தம் 376 பேருடன் கனடாவின் வான்கூவர் துறைமுகத்தை மே 23 அன்று சென்றடைந்தது.

ஆனால், இந்தியர்களை அக்கப்பலிலிருந்து இறங்க விடா-மல் கனடா அரசும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதிகளும் தடுத்தனர். இதை எதிர்த்து இரு மாதங்களாக அக்கப்பலிலிருந்தோரும், அமெரிக்கா மற்றும் கனடாவிலிருந்த இந்தியர்களும் சட்டரீதியாகப் போராடிய போதிலும், கனடிய அரசும் பிரிட்டிஷ் அரசும் அசைந்து கொடுக்கவில்லை. மீறினால் அக்கப்பல் தாக்கித் தகர்க்கப்படும் என்று எச்சரித்து கட்டாயமாகத் திருப்பியனுப்பப்பட்டது. அக்கப்பலைத் தனது ஆளுகையின் கீழிருந்த ஹாங்காங்கிலும் சிங்கப்பூரிலும் நிறுத்தக் கூட பிரிட்டிஷ் அரசு அனுமதிக்காமல் விரட்டியதால், அக்கப்பல் கொல்கத்தாவுக்குத் திரும்பியது. அங்கு பயணிகளைக் கீழிறக்கி கட்டாயமாக பஞ்சாபுக்கு அனுப்ப முயற்சித்ததை எதிர்த்து அவர்கள் போராடியபோது, பிரிட்டிஷ் போலீசார் சுற்றி வளைத்து 177 ரவுண்டுகள் துப்பாக்கிச் சூடு நடத்தி 19 பயணிகளைக் கொன்றனர். படுகாயமடைந்த இதர பயணிகள் அனைவரும் கைது செயப்பட்டனர்.

காலனிய அரசின் இக்கொடுஞ்செயல் இந்தியாவில் மட்டுமின்றி, பிற நாடுகளில் குடியேறிய இந்தியர்களிடமும் கொந்தளிப்பை ஏற்படுத்தியது. பிரிட்டிஷ் அரசின் நிறவெறி - கொலைவெறிக் கொடூரத்தை எதிர்த்து "இந்தியாவுக்குச் செல்வோம் ஆயுதப் போராட்டத்தைத் தொடுப்போம்!" என்ற முழக்கத்துடன் பிரச்சாரத்தை மேற்கொண்ட கெதார் கட்சியின் தலைவர்கள் அமெரிக்கா, கனடா, ஜப்பான், சீனா மற்றும் தென்கிழக்காசிய நாடுகளிலுள்ள இந்திய மக்களை அமைப்பாக்கிப் போராட அறைகூவினர். இந்த அறைகூவலை ஏற்று இந்நாடுகளில் குடியேறியிருந்த இந்தியர்களில் ஏறத்தாழ 6000 பேர் தமது அற்ப உடைமைகளை விற்றுவிட்டு, ஆயுதங்களைக் கொள்முதல் செய்து கொண்டு பிரிட்டிஷ் காலனியாதிக்கத்துக்கு எதிராகப் போராட தாய்நாட்டுக்குப் புறப்பட்டனர். கெதார் வீரர்களையும் ஆயுதங்களையும் தாங்கி பல நாடுகளிலிருந்து அடுத்தடுத்து வந்த கப்பல்கள் இந்தியக் கரையைத் தொட்டதும், அவர்களைக் காலனியாதிக்க அரசு கைது செய்தது. முன்னணிப் போராளிகள் அனைவரும் தூ க்கிலிடப்பட்டு கொல்லப்பட்டனர். ஆயுள்தண்டனைக் கைதிக-ளாக நூற்றுக்கணக்கான கெதார் வீரர்கள் அந்தமான், மாண்டலே சிறைகளில் அடைக்கப்பட்டனர்.

பிரிட்டிஷாரிடம் சிக்காமல் தலைமறைவாகிய இதர கெதார் இயக்கப் போராளிகள் பஞ்சாபில் விவசாயிகளிடம் பிரச்சாரத்தை மேற்கொண்டு அமைப்பாக்கினர். அன்றைய பிரிட்டிஷ் ராணுவத்தில் சிப்பாய்களாக இருந்த இந்தியர்களை, குறிப்பாக சீக்கியர்களை ஆயுதப் புரட்சியில் இறங்குமாறு அறைகூவி அணிதிரட்டினர். பஞ்சாப் மட்டுமின்றி உ.பி., வங்காளம் மற்றும் பிற பகுதிகளிலிருந்தும் சிப்பாய்களை இணைத்துக் கொண்டு 1915 பிப்ரவரி 21-ஆம் தேதியன்று பிரிட்டிஷாருக்கு எதிராக ஆயுதமேந்திய திடீர் தாக்குதல் நடத்த நாள் குறிக்கப்பட்டது. ஆனால் சில துரோகிகளால் இத்திட்டம் பிரிட்டிஷ் அரசுக்குக் காட்டிக் கொடுக்கப்பட்டு முன்னணித் தலைவர்கள் கைதாகி னர். அவர்கள் மீதான விசாரணை நடத்தப்பட்டு கர்ட்டார் சிங் சாராபா உள்ளிட்ட 45 தலைவர்களுக்குத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது. 200-க்கும் மேற்பட்டவர்கள் அந்தமான் சிறை யில் அடைக்கப்பட்டனர்.

அதே பிப்ரவரி மாதத்தில், சிங்கப்பூரில் பிரிட்டிஷாரை எதிர்த்து கலகத்தில் இறங்கிய கெதார் கட்சியினரும் பிரிட்டிஷ் ராணுவத்தில் சிப்பாய்களாக இருந்த இந்தியர்களும் கைது செயப்பட்டு, அவர்களில் 37 பேர் பொது இடத்தில் சுட்டுக் கொல்லப்பட்டனர். வெளிநாடுகளில் முகாமிட்டிருந்த பிரிட்டிஷ் படைகளில் இதுபோல கலகத்துக்கு முயற்சிகள் நடந்து தோல்வியுற்றன. 1915-இல் மட்டும் அடுத்தடுத்து நூற்றுக்கும் மேற்பட்ட கெதார் போராளிகள் கொல்லப்பட்டனர்.

காலனியாதிக்கவாதிகளின் கடுமையான அடக்குமுறைக்கு ஆளாகி அழிக்கப்பட்ட போதிலும், கெதார் கட்சி நாட்டு மக்களின் மனங்களில்ஆழமாக ஊன்றிய நாட்டுப்பற்றையும் தியாகத்தையும் போர்க்குணத்தையும் எவராலும் ஒருக்காலும் அழிக்க முடியாது. கெதார் இயக்கத்தின் போர்க்குணமிக்க மரபு-களை உள்வாங்கிக் கொண்டு பகத்சிங்கின் நவ்ஜவான் பாரத் சபாவாகவும், கிர்தி கிசான் கட்சி, கம்யூனிஸ்டு கட்சி, கம்யூனிஸ்டு கெதார் கட்சி, நக்சல்பாரிகள் முதலான இயக்கங்களாகவும் அது பின்னாளில் பரிணமித்தது.

ஆட்சியாளர்களான ஏகாதிபத்தியக் கைக்கூலிகள் கெதார் இயக்கத்தின் நூற்றாண்டு விழாவை வெட்கமின்றிக் கொண்டாடுகின்றனர். ஆனால், கெதார் இயக்கம் உரு வாக்கி வளர்த்த நாட்டுப்பற்றும், தியாகத்துக்கு அஞ்சாத துணிவும், போர்க்குணமுமிக்க பாரம்பரியமும் இன்றைய மறுகாலனியாதிக்கச் சூழலில் அந்நிய ஏகாதிபத்தியங்களுக்கு எதிராகச் சளையாமல் போராடிவரும் புரட்சிகர - ஜனநாயக சக்திகளுக்கே சோந்தமானது.

திறப்பு விழா காண இருக்கும்

# முள்ளிவாய்க்கால் நினைவு முற்றம்

இறுதியாக, விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் வாழ்ந்த புதுக்குடியிருப்பு பதுங்கு குழியையும் குண்டுவைத்துத் தகர்த்துவிட்டு, அந்த இடத்தில் புத்த விஹாரை அமைக்கத் திட்டமிடுகிறது இலங்கை அரசு. 30 வருடங்கள் நடைபெற்ற ஆயுதப் போராட்டத்தின் அடையாளமாக ஈழ மண்ணில் இப்போது எதுவும் இல்லை.

இந்த நிலையில், ஈழ மண்ணில் பெருகியோடிய குருதியாற்றின் சுவடை, தஞ்சையில் பதித்திருக்கிறது ‘முள்ளிவாய்க்கால் நினைவு முற்றம்!’ ஈழத் தமிழர்கள் அனுபவித்த போர்க் கொடுமைகள், நினைவு முற்றத்தின் சிற்பங்களாகப் பரந்து விரிந்திருக்கின்றன. அந்தத் தமிழர்களின் வலியை, வேதனையை, கதறலை, ஆக்ரோஷத்தை அச்சு அசலாகப் படியெடுத்திருக்கிறது ஒவ்வொரு சிற்பமும்.

தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ.நெடுமாறனின் நேரடிக் கண்காணிப்பில் நூற்றுக்கணக்கான சிற்பிகள், பல ஓவியர்களின் கூட்டு உழைப்பில் உருவான முற்றத்தின் சிற்பங்களின் பிரமாண்டம் பிரமிப்பூட்டும் அதே சமயம், மனதின் ஈரத்தைக் கசியவைக்கின்றன!

முற்றத்தின் நடுவில், 40 தொன் எடையுள்ள தமிழ்ப் பாவை யின் சிற்பப் பீடம். அதன் இரு பக்கங்களிலும் ஈழத்தின் அவலத்தையும், தமிழர்களின் உயிர்த் தியாகத்தையும் கற்சிற்பங்களாக வடித்திருக்கிறார்கள். தமிழ்ப் பாவை சிற்பத்தின்


தமிழ்ப் பாவை பீடம்

பீடத்தினுள் எட்டிப்பார்த்தால், நமது முகத்தைப் பிரதிபலிக்கிறது முப்பரிமாணக் கண்ணாடி.

வெள்ளையர்களை எதிர்த்த தமிழ் மன்னர்கள், மொழிப் போர் தியாகிகளின் படங்களோடு விடுதலைப் புலித் தளபதிகளின் படங்களும், அவர்களைப் பற்றிய குறிப்புகளும் உள்ளன. முற்றத்தின் அரங்கில் பிரதான மரியாதை, பார்வதி அம்மாளுக்கும் வேலுப்பிள்ளைக்கும்.

முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தின் உள்ளேயே தங்கியிருந்து வேலைகளைப் பார்வையிடும் பழ.நெடுமாறனிடம் பேசினேன்...

“மூன்று ஆண்டுகளுக்கு முன்பு நல்லகண்ணுவும் வைகோவும் இந்த முற்றத்துக்கான அடிக்கல் நாட்டியபோது, ஒரே ஒரு நினைவுத் தூண் அமைப்பது மட்டும்தான் நோக்கம். ஆனால், தொடர்ந்து பல சந்தர்ப்பங்களில் ஈழத்தில் மாவீரர் துயிலும் இல்லங்கள் அழிக்கப்பட்டதோடு, புலிகளின் வெற்றிச் சின்னங்களையும் அழித்து சிங்கள ராணுவத்தின் சின்னங்களை அங்கே நிறுவிவிட்டார்கள். அதன் பிறகே, ஈழத்தில் நிகழ்ந்த அவலம் ஆவணம் இன்றி கடந்துவிடக் கூடாது என்று இந்த முற்றத்தை வடிவமைக்கத் தீர்மானித்தோம். இந்தப் பெருங்கனவை நனவாக்க கல் கொடுத்தவர்கள், மண் கொடுத்தவர்கள், மரம் கொடுத்தவர்கள், புகைப்படங்களைச் சேகரித்துக் கொடுத்தவர்கள்... என இது மிகப் பெரும் உழைப்பு!

40 தொன் எடையுள்ள தமிழ்ப் பாவை சிற்பத்தை, 15 அடி மேடையில் ஏற்றி வைத்தோம். இந்த முற்றத்தினுள் வடிக்கப்பட்டுள்ள சிற்பங்களுக்கு ஆதாரமாக இருந்தவை ஓவியர் வீரசந்தானம் வரைந்த ஓவியங்கள்தான்!” என்று வீரசந்தானம் பக்கம் மடை மாற்றுகிறார் பழ. நெடுமாறன்.

“மகாபலிபுரத்தில் இருக்கும் ‘அர்ஜுனன் தபசு’ போன்ற நீளமான கல்லின் இரண்டு பக்கமும் ஈழ வரலாற்றைப் பதிவுசெய்யும் ஓவியங்களை கோட்டோவியமாக வரைந்து

17 ▶



# அடங்காப்பற்று

## நாட்டியத்தில் ஒரு வரலாற்றுக் காவியம்

சாந்தினி - சிட்னி



இலக்கு வலுவாக இருந்தால் பாதை தெளிவாக இருக்கும் என்பதற்கு ரசனா நடனப்பள்ளியின் “அடங்காப்பற்று” ஒரு சிறந்த எடுத்துக்காட்டு. போரினால் பாதிக்கப்பட்டு, அன்றாட வாழ்வுக்காக அல்லலுறும் எம் தாயகத்து உறவுகளின் மறு வாழ்வுக்காக நிதி உதவி வேண்டி கடந்த ஆறு வருடங்களாக ரசனா நடனப்பள்ளி நடாத்தி வரும் நாட்டிய நிகழ்வின் ஒரு தொடராக இவ்வருடம் நடந்தேறிய நாட்டிய நிகழ்வுதான் அடங்காப்பற்று.

மூன்றாவது முறையாக Patchwork அமைப்பிற்கு நிதியளிப்பதற்காக அடங்காப்பற்று அரங்கேற்றப்பட்டது. போரின் மோசமான பாதிப்புக்கு உள்ளாகி, அவையங்களை இழந்து, தனித்து இயங்கமுடியாமல் இருக்கும் எம் உறவுகளுக்கு உதவி வழங்கிப் பராமரித்து வரும் அமைப்புத்தான் Patchwork. கடந்து மூன்று வருட்களாகச் செயற்பட்டு வரும் இந்த



அமைப்பு முழுமையாக மாற்றுத்திறனாளிகளின் நலனுக்காக இயங்கிவருகின்றது. இந்த அமைப்பின் செயற்பாட்டுக்கு உறுதுணை வழங்குவதற்காக, ரசனா நடனப்பள்ளி 2013இல் அடங்காப்பற்று என்ற தொனிப்பொருளில் நாட்டிய நாடகத்தை வழங்கியது. இது ரசனா நடனப்பள்ளியின் நீண்டநாள், கடின உழைப்பின் ஆறாவது அரங்கேற்றம்.

19.10.2013 அன்று மாலை 6.30 Hurstville Entertainment Centre (Sydney) இல் நிகழ்வு ஆரம்பமாவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், ஆறு மணிக்கே கூட்டம் கூடத்தொடங்கிவிட்டது. தமிழர்கள் மட்டுமல்ல, கணிசமான அள வில் வேற்று இனத்தவர்களும் வந்திருந்தார்கள். ஈழத்தமிழர் மீது அபிமானம் கொண்ட பசுமைக்கட்சியின் (Green Party) உறுப்பினர்களும் வருகை தந்திருந்தார்கள்.



6.20 மணியளவில் பார்வையாளர்கள் அரங்கத்திற்குள் அனுமதிக்கபட்டார்கள். பிரமாண்டமான, ஆனால் அடக்கமான அரங்கம். மேடையின் நடுவில் கம்பு, வாள், அம்பு, என பண்டைய போர்க்கால ஆயுதங்கள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. அரங்கத்தின் முன்னிலை ஓரமாக, நாட்டியத்தின் தந்தை நடராஜரின் உருவச்சிலையுடன் ஈழத்தமிழரின் வரலாற்று நாயகி ”நல்ல நாச்சியார்” அவரின் படமும் வைக்கப்பட்டிருந்தது. வாளேந்தியபடி குதிரை மீது அவர் அமர்ந்திருந்த தோற்றம், பண்டைய ஆயுதங்களின் தொகுப்பு என்பன நிகழ்வு தொடர்பாக ஒரு பலத்த எதிர்பார்ப்பைக் கொடுத்திருந்தன. ஆவலுடன் காத்திருந்தபோது, நிகழ்வு ஆரம்பிப்பதற்கான அறிவிப்பு வந்தது.

வைத்தியக் கலாநிதிகளான திரு திருமதி தவ சீலன் தம்பதிகளின் மங்கள விளக்கேற்றலைத் தொடர்ந்து, எம் மண்ணுக்காக வித்தாகிப்போன மாவீர தெய்வங்களுக்கும், இலங்கை மற்றும் இந்தியப்படைகளால் கொல்லப்பட்ட அப்பாவி மக்களுக்குமாக அகவணக்கத்துடன் நிகழ்வுகள் ஆரம்பித்து வைக்கட்டன.

முதல் நிகழ்வாக, நாட்டிய மரபின்படி, ”புஸ்பாஞ்சலி” நடனத்தின் மூலம் நடனத்திற்கும், குருவிற்கும் அவைக்கும் வணக்கம் வைக்கப்பட்டது. நாற்றிசைக்கும் கரம்கூப்பி மூவர் ஆடிய புஸ்பாஞ்சாலி நல்ல ஆரம்பமாகவும், நேர்த்தியாகவும் இருந்தது.

புஸ்பாஞ்சலியின் நிறைவைத் தொடர்ந்து, ”அடங்காப்பற்று” நிகழ்வு மேடையேறியது. நிகழ்வின் முதல் அங்கமாக அன்றைய நிகழ்வின் நாயகி வீரவன்னிச்சி நல்ல நாச்சியாருக்கு வீர வணக்கம் செலுத்தப்பட்டது. அந்த மறத்தமிழச்சி ஏன் வாளேந்தினாள்? அந்த வரலாறு என்ன? என்ற கேள்விகளுடன் ”அடங்காப்பற்று” என்ற எண்ணக்கருவுக்கான தெளிவான விளக்கத்தைக் பின்னணிக்குரல்கள் கொடுக்கத்தொடங்கின.

அடங்காப்பற்று இரண்டு வகையான கருப்பொருளைக்கொண்டது. தீராத பற்று, அடிபணியாத தேசம். ஆம் தமிழ் மீது கொண்டது தீராத பற்று, இது ஒரு அடங்காப்பற்று. யாருக்கும் அடிபணியாத தேசம் எம் வன்னிமண் இது மற்றொரு அடங்காப்பற்று. தமிழ் மீதும் அன்னை மண் மீதும் தீராத பற்றுக்கொண்டு, யாருக்கும் அடிபணிந்து வாழமாட்டோம் என வெள்ளையனோடு போராடி வீரமரணம் அடைந்த எங்கள் முப்பாட்டன் குலசேகரன் வீரமுத்துப் பண்டார வன்னியனின் வீரவரலாற்றை கதைக் களமாகக் கொண்டு அடங்காப்பற்று பயணிக்கத் தொடங் கியது.

பின்னணி வசனம். இசை, பாடல்களுடன் ஒரு வரலாற்றை நாட்டியமாகத் தந்து கொண்டிருந்தது ரசனா நடனப்பள்ளி. பண்டாரவன்னியன் அவனது தமிழ்ப் பற்று, வீரம், எவ்வாறு காக்கை வன்னியனால் வஞ்சகமாக வீழ்த்தப்பட்டான்? குருவிச்சி நாச்சியார் யார்? அவர் எப்படி ஒரு போராளியானார்? போர்க்களத்தில் அவர் சாதனைகள் என்ன? என ஒரு வலராற்றுக் காவியம் இடைவேளை வரை நேர்த்தியாக நகர்ந்தது.

இடைவேளையின் பின்னர், சிங்களப் பேரினவாதத்தின் அடக்கு முறையையும், அதை எதிர்கொண்ட ஆயுதப் போராட்டத்தையும், அந்த ஆயுதப்போராட்டம் பல நாடுகளின் ஒத்துழைப்புடன் வீழ்த்தப்பட்டதையும், அதன் பின்னரான கொடு மைகளையும் சிறப்பாக எடுத்துக்காட்டி, எத்தனை தடை வந்தாலும் விழ விழ எழுவோம் அடிபணிய மாட்டோம் எனத் துணிவாக எழுந்து ”நிமிர்ந்து நில், தொடர்ந்து செல்” என்ற கோசத்துடன் நாட்டிய நாடகம் நிறைவுக்கு வந்தது.

நாட்டிய நிகழ்வின் நாயகன் சேரன் சிறிபாலன். ஒரு நடனப்பள்ளியின் குருவாக, தேர்ச்சிபெற்ற அவரது நடனம், எந்தவிதமான தளம்பலோ தளர்வோ இல்லாமல் நேர்த்தியாக இருந்தது. காதல், சோகம், கோபம், ஆத்திரம், இயலாமை என ஒவ்வொரு உணர்வின் பரிமாணத்தையும் தனது முக பாவங்களில் அவர் காட்டியவிதத்தில் வார்த்தைகளுக்கான தேவை இருக்கவில்லை.

எமது முப்பாட்டி குருவிச்சி நல்ல நாச்சியாரை எம் கண்முன்னே கொண்டு வந்த மீனா கிருஸ்ணமூர்த்தியின் நடனத்திற்கு அரங்கம் நிறைந்த கரகோசம் கிடைத்தது. தொடர்ச்சியாக, நீண்ட நேரம் தளர்வின்றி ஆடிக்கொண்டிருந்தார். அவருடைய முகபாவங்களிலும், உணர்வுகளை வெளிப்படுத்திய விதத்திலும் அவரது நாட்டியத்தின் மீதான பற்றும் தேர்ச்சியும் வெளிப்படையாகத் தெரிந்தது. பின்னணிக்குரல்களுக்கு ஈடுகொடுத்துக் காட்டிய நடிப்பில் அவருடைய தனித்துவம் தெரிந்தது.

குருவுடன் நடனமாடும் வாய்ப்புக் கிடைப்பது அரிதானது. ஆனால் அவ்வாறான ஒரு சந்தர்ப்பத்தைப் பெற்ற கிருசிகா அரசநாயகம், தமிழ்நிலா யோகசிங்கம் இருவரும் குருவுக்கு ஈடுகொடுத்து ஆடினார்கள். சேரன் சிறிபாலனின் மாணவிகளான அவர்களின் நடனம் தேர்ச்சி பெற்றவர்களின் நடனத்திற்கு இணையாக இருந்தது. ரசனா நடனப்பள்ளி உருவாக்கும் நாட்டியகாரர்களின் பட்டியலில் இவர்களுக்கு முதன்மையான இடம் நிச்சயமாக உண்டு. சிறப்பான எதிர்காலத்திற்கு வாழ்த்துக்கள்.

வளர்ந்துவரும் கலைஞனான தினேஷ் இரவீந்திரன் நாட்டியத்தில் மட்டுமல்ல, நடிப்பிலும் ஆற்றலும் திறமையும் உண்டு என்பதை தெளிவாகக் காட்டியிருந்தார். காக்கை வன்னியன் என்ற நம்பிக்கைத் துரோகியின் வஞ்சகத்தை தனது இயல்பான நடிப்பின் மூலம் வெளிப்படுத்தியிருந்தார். எமக்குப் பின்னால் இருந்த மழலை ஒன்று ”அந்த uncle so bad” என்று தனது மழலைக்குரலில் கூறும்போதுதான் தெரிந்தது அவருடைய நடிப்பின் தாக்கம். நிச்சயமாக அந்தச்சிறுமிக்கு பண்டார வன்னியன் வரலாறு தெரிந்திருக்காது.

ஆரம்பம் முதல் இறுதிவரை நிகழ்வின் எல்லா அங்கத்திலும் பங்கு கொண்டிருந்த சர்மா நிகஷன், நாட்டியம் பயின்று கொண்டிருக்கும் ஒரு மாணவன். ஆனால் தேர்ச்சிபெற்ற நடனக்கலைஞர்களுக்கு அவன் ஈடுகொடுத்து ஆடிய விதம் அவனுக்கான சிறப்பான எதிர்காலத்தை படம்பிடித்துக்காட்டியிருந்தது. காலில் கட்டுப்போட்டபடி, ஒவ்வொரு அசைவிலும் விட்டுக்கொடுக்காமல் ஆடியவிதம் மனதை நெகிழவைத்தது.

யோகனா பால் நிகழ்வின் ஆரம்பத்திலிருந்து இருந்தாலும், இறுதிப்பாகமான ”விழ விழ எழுவோம்” என்ற அங்கத்தில் தனிப்பொறுப்பேற்று, நாட்டியத்தில் தனது தனித்துவத்தை நேர்த்தியாக வெளிப்படுத்தியிருந்தார். ஒரு வெறுமைக்குள் சிக்கித் தவிக்கும் எம்முடைய இன்றைய இயலாமை நிலையையும். அதிலிருந்து மீளத்துடிக்கும் துடிப்பையும் ஒரு


18 ▶



# இலங்கையில் முஸ்லிம் பயங்கரவாதமா?

## வடக்கில் அகலக்கால் பதிக்கும் பாகிஸ்தான் உளவுப் பிரிவு

## இந்தியா 'அலேர்ட்'



**ஈழத்திலிருந்து ஜெயம்**

அண்மைக்காலமாக இலங்கையில் முஸ லிம் பயங்கரவாதம் உள்ளதாக பல தடவைகள் பாதுகாப்புச் செயலர் கோட்டபய ராஜபக்ஷ கூறி வருகின்றார். அத்துடன் பொதுப்பலசேனாவும் அடிக்கடி கொக்கரித்து வருகின்றது. பாதுகாப்புச் செயலரின் கருத்துக்கு முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீமும், அமைச்சர் ரிஷாத் பதியு தீனும் கண்டனம் தெரிவித்திருந்தார்கள்.

உண்மையில் இலங்கையில் முஸ்லிம் பயங்கரவாதம் ஒன்று இல்லை என்று முஸ்லிம் தரப்பு அடித்துக் கூறுகிறது. ஆனால் முஸ்லிம் பயங்கரவாதம் ஒன்றை இலங்கைக்குள் தோற் றுவிக்கப் பார்க்கின்றார்கள். அந்தப் பயங்கரவாத இயக்கங்களுடன் இலங்கை முஸ்லிம்களை இணைத்து முடிச்சு போடப் பார்க்கின்றார்கள்.

### புலிகள் அழிப்பில் பாகிஸ்தானின் பங்கு

திருகோணமலை மாவிலாறு பகுதியில்தான் புலிகளுக்கு எதிரான யுத்தம் ஆரம்பமானது. இலங்கைப் படையினர் பாகிஸ்தானிலிருந்து தருவிக்கப்பட்ட மல்டிபரல் என்னும் யுத்த தாங்கிகளையே புலிகளுக்கு எதிராகப் பாவித் தார்கள். இந்த யுத்தத் தாங்கிகளே அதிகளவில் புலிகளுக்கு எதிராகப் பாவிக்கப்பட்டன.

புலிகளை ஒழித்த விடயத்தில் இந்தியாவுக்கு அடுத்தபடியாக பாகிஸ்தானின் பங்களிப்பும், வகிபாகமும் மிகவும் முக்கியமானவை. இலங் கைக்கு பெருமளவு யுத்த தாங்கிகளை பாகிஸ் தான் வழங்கியுள்ளது. மற்றும் தொடர்ந்து ஜெனீ வாவில் இலங்கைக்கு ஆதரவாக இன்னும் பாகிஸ்தான் செயலபட்டு வருகின்றது.

### வடக்கில் உளவு நிலையம்

பாகிஸ்தானின் உதவிகளுக்கு கைமாறாக இந்தியாவுக்குத் தெரியாமலேயே வடக்கில் இரண்டு வேவு தளங்களை நிறுவிக்கொள்ள இலங்கை அனுமதி வழங்கியுள்ளது. இந்தி யாவை உளவு பார்ப்பதற்கும், இந்தியக் கடற்பரப் பில் இந்திய இராணுவத்தின் தொடர்பாடலை இடைமறித்து அவதானிப்பதற்கும் பாகிஸ்தா னின் ஐ.எஸ்.ஐ. உளவு அமைப்பு யாழ்ப்பாணத் தில் உளவு அவதானிப்பு நிலையத்தை நிறுவி யுள்ளது. இந்த உளவுத் தளங்களில் இந்திய நீர் மூழ்கிக் கப்பல்களின் நடமாட்டங்களை அவதா னிக்கும் கருவிகளையும் ஐ.எஸ்.ஐ. பொருத் தியுள்ளதாம்.

### யாழில் இந்திய துணைத் தூதரகம்

பாகிஸ்தானின் அகலக் கால் இலங்கைக்குள் பதிந்த பின்னரே யாழ்ப்பாணத்தில் முற்றும் முழுதாக 'றோ' அதிகாரிகளைக் கொண்டு தனது துணைத் தூதரகம் ஒன்றை இந்தியா நிறுவியுள் ளது. இந்தியா தனது தேசிய பாதுகாப்பில் அதிக கவனம் செலுத்த வேண்டிய பாரிய பொறுப் பிலும், தேவையிலும் உள்ளது.

இந்தியாவின் நேசநாடு என்று சொல்லும் இலங்கைக்குள் இருந்து இந்தியாவுக்கு எதிராகக் கிளம்பும் பாகிஸ்தான், சீனா ஆகிய நாடுகளின் எந்த உருவிலான பயங்கரவாதத்தையோ, நாசகார வேலைகளையோ எவராலும் அனும திக்கவும் முடியாது. எவரும் செய்யவும் கூடாது. தூண்டவும் கூடாது. அப்படி நடந்தால் அது ஆரோக்கியமான அரசியல் முன்னெடுப்பாக அமையாது. அந்த முன்னெடுப்பு மிகவும் ஆபத் தானது என்பதை காலம் பதில் சொல்லும்

### பாகிஸ்தான் நுழைவு முஸ்லிம்களுக்கு ஆபத்து

இலங்கைக்குள் பாகிஸ்தான் முஸ்லிம் நாடு என்பதால் இலங்கை முஸ்லிம்கள் சிலர் குறிப் பாக வட கிழக்கு முஸ்லிம்கள் சிலர் பாகிஸ்தா னின் எந்தவொரு சதி வேலைக்கும் நாச வேலைக்கும் துணைபோகக் கூடாது. ஆதரிக்க வும் கூடாது. ஆனால் அப்படிப்பட்ட நாச வேலை களில் சில முஸ்லிம்கள் ஈடுபடக்கூடிய அதிக வாய்ப்புள்ளது. இவற்றைக் கண்டறிய வேண் டிய தேவை இந்தியாவுக்குள்ளது.

பாகிஸ்தானின் பயங்கரவாதம் உருது மற் றும் அரபு மொழி பேசும் முஸ்லிம் இளை ஞர்களால் மட்டுமே கவரப்பட்டு வந்தது. ஆனால் கடந்த காலங்களாக தமிழ்நாட்டில் தமிழ் பேசும் முஸ்லிம் இளைஞர்களும் பாகிஸ்தானின் ஐ.எஸ்.ஐ. என்ற உளவு அமைப்பின் மூலம் உள்வாங்கப்பட்டு விட்டார்கள். தமிழ் நாட்டில் ஏராளமான முஸ்லிம் இளைஞர்கள் பாகிஸ்தா னின் பயங்கரவாதச் செயல்களில் ஈடுபட்ட மைக் கான குற்றச்சாட்டில் சிறைகளில் வாடுகின்றனர்.

கடந்த மாதமும் மிகவும் முக்கியமான தீவிர வாதிகள் 3 பேர் தமிழ்நாட்டில் துப்பாக்கிச் சண்டை யின் மூலமாகக் கைது செய்யப்பட்டுள்ளார்கள். இலங்கையின் பயங்கரவாதத் தடைச்சட்டம் போன்று இந்தியாவின் பொடா சட்டத்தின் மூலம் வெளியே வர முடியாதவாறு சிறைகளில் அடை பட்டுள்ளார்கள். கடந்த 10 வருடங்களுக்கும் மேலாக தமிழக சிறைகளில் தமிழக முஸ்லிம் இளைஞர்கள் அடைக்கப்பட்டுள்ளார்கள். பாகிஸ்தா னின் ஐ.எஸ்.ஐ. என்ற உளவு அமைப்பின் சதி வேலைகளில் இந்த இளைஞர்கள் ஈடுபட்டார்கள் என்ற குற்றச்சாட்டில்தான் சிறைகளில் உள்ளனர்.

### தலிபான்,அல்-குவைதா இலங்கை தடை

அல் - குவைதா மற்றும் தலிபான் இயக்கம் பற்றி இலங்கையில் மக்களுக்கு பெரிதாகத் தெரியாது. இந்த இயக்கங்களுக்கும் இலங்கைக்கும் சம்பந்த மேயில்லை. குறிப்பாக இலங்கை முஸ்லிம்க ளுக்கும் இந்த இயக்கங்களுக்கும் எவ்விதமான தொடர்புகளும் இருப்பதற்கான எந்தத் தகவல்களும் ஆதாரங்களும் இல்லை என்பதை இலங்கைப் பொலிஸார் திட்டவட்டமாகச் சொல்லியிருந்தார்கள்.

ஆனால் இந்த இரண்டு இயக்கங்களுக்கும் இலங்கை அரசு தடை விதித்துள்ளது. அதாவது இந்த இயக்கங்கள் பற்றிய ஆவணங்கள் வைத் திருப்பது, ஆதரவுகள் பண உதவிகள் அளித்தல் ஆகியவை தண்டனைக்குரிய குற்றங்களாகும். இந்தக் குற்றங்களில் சிக்குவோர்கள் குறைந்தது 5 வருடங்கள் சிறைவாசம் அனுபவிக்க நேரிடும். தலிபான்கள் ஆப்கானிஸ்தான் முன்னாள் பிரதமர் முல்லா உமரின் படையினர். இந்தப் படையினர் இன்னும் ஆப்கானிஸ்தானில் அமெரிக்கா மற்றும் அதன் நேச நாட்டுப் படையினருக்கு எதிரான தாக் குதல்களில் ஈடுபட்டு வருகின்றனர்,

அல்-குவைதா ஒசாமா பின்லேடனின் படை யினர். உலகம் முழுவதும் அல்-குவைதா பரவியுள் ளது என்றும், உலகம் முழுவதும் ஒரு வலைத் தளம் (நெட்வேர்க்) மூலமாக இயங்கி வருகிறது என்றும் அமெரிக்கா சொல்கின்றது. இந்த இரண்டு இயக்கங்களும் இலங்கையில் இல்லை என்றே இலங்கை பொலிஸ் சொல்கின்றது. இந்த இயக்கம் சம்பந்தமான எந்தவொரு ஈடுபாடும் இலங்கையில் இல்லையென்பதை இலங்கைப் பொலிஸ் உறுதிப் படுத்துகின்றது.

### முஸ்லிம்களை சிக்கவைக்கச் சதியா?

தமிழக இளைஞர்களை பாகிஸ்தானின் ஐ.எஸ்.ஐ. சிக்க வைத்து போன்று இலங்கை முஸ்லிம் இளைஞர்களையும் பாகிஸ்தான் சிக்க வைக்க முயற்சிகள் செய்யலாம். ஏனெனில் முஸ லிம் இளைஞர்களை பாகிஸ்தான் பண ஆசை யைக் காட்டி மயக்கலாம். வேலை வாய்ப்பின்றி இருக்கும் இளைஞர்களும் பாகிஸ்தானின் வலை யில் சிக்கலாம். இப்படியாக தனிப்பட்ட முறையில் யாராவது சிக்கினால் அதனை வைத்து இலங்கை யில் முஸ்லிம் பயங்கரவாதம் உள்ளது என்று இலங்கையின் பேரினவாதிகளும் கொக்கரிக்க லாம். அரசும் தம்பட்டம் அடிக்கலாம். ஏன் அதை வைத்து அமெரிக்காவுக்கும் தளம் அமைத் துக் கொடுக்கலாம். அதன் மூலம் சர்வதேச அரங் கில் இலங்கை முஸ்லிம்களுக்கும் அல்-குவைதா வுக்கும் தலிபான்களுக்கும் தொடர்புள்ளதாக ஒரு பிம்மம் காட்டப்படும். உண்மையில் தமிழகத் திலோ, இலங்கையிலோ யாராவது தனிப்பட்ட முறையில் பாகிஸ்தானின் பயங்கரவாதச் செயல் களில் ஈடுபடுவது அந்த நபரின் வயிற்றுப் பிழைப் புக்காகச் செய்யும் வேலையே தவிர அது திட்ட மிட்டுச் செய்யும் செயல் அல்ல.

### பாகிஸ்தானால் நன்மையில்லை

பாகிஸ்தானைப் பொறுத்தமட்டில் முஸ்லிம் நாடு என்றும் பாகிஸ்தான் முஸ்லிம்களின் நலனில் அக்கறை கொள்ளும் என்றும் நாம் நினைத்துக் கொண்டிருக்கின்றோம். ஆனால் எந்த நாடும் தனது சொந்த நலனில்தான் அக்கறை கொள்ளும் என் பதை நாம் தெரிந்து கொள்ள வேண்டும். மியான் மரில் இராணுவ ஆட்சியில் முஸ்லிம்களுக்கு எதிராகக் கட்டவிழ்க்கப்படும் கொலைவெறியை உலகமே அறியும். அந்த அளவுக்குப் பரவிக் கொண்டிருக்கின்றது. ஆனால் பாகிஸ்தான் ஒரு சிறிய கண்டனத்தையாவது மியான்மருக்கு விடுக்கவில்லை.

ஏனெனில் மியான்மர் பாகிஸ்தானின் நேச நாடு, உறவு நாடு. நட்பு நாடு. அதனால் மியான் மருக்கு எதிராகவும், மியான்மர் இராணுவ ஆட்சி யாளர்களுக்கு எதிராகவும், அங்கு நடைபெற்று வரும் மனித உரிமை மீறல்களுக்கு எதிராகவும் பாகிஸ்தானால் பேச முடியவில்லை. அதே நிலை யில்தான் இந்தியாவும். மியான்மர் இந்தியாவின் நேச நாடு; உறவு நாடு என்பதால் மியான்மருக்கு எதிராக இந்தியாவால் ஒன்றும் செய்ய முடியா துள்ளது.

சீனாவின் உறுமி பகுதியில் முஸ்லிம்கள் மீது சீன அரசு வன்முறையைக் கட்டவிழ்த்து விட்டது. ஆயிரக்கணக்கான முஸ்லிம்கள் கொல்லப்பட்ட னர். சீனாவின் இந்த மனித உரிமை மீறல்களை எதிர்த்து நண்பேண்டா நாடு, பாகிஸ்தான், இந்தியா வாயே திறக்கவில்லை. நண்பேண்டா நாடுகளில் நடைபெறும் மனித உரிமை மீறல்கள், காட்டுத் தர்பார்கள் ஆகியவற்றை நண்பேண்டா நாடுகள் கண்டு கொள்வதில்லை.

இதுதான் நண்பேண்டா நாடுகளின் வெளியு றவுக் கொள்கை. ஆக பாகிஸ்தான் இலங்கைக்குள் நுழைந்த நோக்கமே இந்தியாவுக்கு எதிரான சதிவேலைகளில் ஈடுபடுவதற்காகவே. இதைத் தவிர வேறு நோக்கமில்லை. அதனால் பாகிஸ்தான் இலங்கை முஸ்லிம்களுக்கு உதவும் காப்பாற்றும் என்று இலங்கை முஸ்லிம்கள் பாகிஸ்தானை நம்பவே கூடாது. பாகிஸ்தான் முற்றும் முழுதாக அதன் நன்மை கருதியே இலங்கைக்குள் அகலக் கால் பதித்துள்ளது.

இன்று இலங்கையில் முஸ்லிம்களுக்கு எதிராக இனவாதிகளால் நடத்தப்படும் எத்த னையோ சம்பவங்களுக்கு எதிராக பாகிஸ்தான் ஏதாவது குரல் கொடுத்துள்ளதா? நண்பேண்டா நாடு என்றால் இலங்கைக்குள் நடைபெறும் இனவிரோத நடவடிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க பாகிஸ்தானால் முடியாதா.? முடியும். ஆனால் பாகிஸ்தான் செய்யாது. காரணம் நண்பேண்டா நாடு.

### பொதுபலசேனாவின் சதி

இந்நிலையில் சிங்கள மக்களையும் முஸ் லிம் மக்களையும் பிரிப்பதற்கு பொதுப்பல சேனா பெரும் பிரயத்தனம் செய்கின்றது. இந்தப் பிரயத்தனம் அண்மையில் நடந்து முடிந்துள்ள மத்திய, வடமேல் மாகாணத் தேர்தல்களில் எதி ரொலித்துள்ளது. அது தாக்கம் செலுத்தியுள்ளது.

இந்தியாவின் அமைதியைக் குழப்புவதற் காகவும், இந்திய மக்களுக்கும் இந்திய அரசுக் கும் தொல்லை கொடுப்பதற்காகவும் இந்தியா வின் எதிரி நாடுகள் கங்கணம் கட்டிக் கொண்டு அலைகின்றன. இந்திய உளவுப் படையினர் வர்த்தகர்கள் வேடம் பூண்டு வட கிழக்கில் சுற்றி வருவதால் ஏதாவது ஒரு சிறிய பயங்கரவாதச் செயல்களில் எவர் ஈடுபட்டாலும் அதைப் பற்றி உடன் இலங்கைக்கு இந்தியா அறியத் தந்து விடும்.

அதனால் இந்திய உளவுப் படையினர் இலங் கையில் உளவு வேலைகளில் ஈடுபட்டு வருவது இலங்கைக்குள் தவிர்க்க முடியாத ஒன்றாகி விடுகின்றது. தற்போது கல்முனைப் பகுதிகளில் இந்திய துணிவியாபாரிளாக றோ அதிகாரிகள் சுற்றி வருகின்றார்கள். இந்திய றோ பிரிவால் முஸ்லிம்களுக்கு பெரும் நன்மைகள் உள்ளன.

இலங்கைக்குள் பாகிஸ்தான் அகலக் கால் பதித்து விட்டது. பாகிஸ்தானின் பயங்கரவாதம் தமிழ்நாடு வரையும் புகுந்து விட்டது. இலங் கையின் கிழக்கு மாகாணத்தைக் குறிவைத்து முஸ்லிம் இளைஞர்களை கெடுக்க முயற்சிகள் செய்யலாம். முஸ்லிம் இளைஞர்கள் பிழை யான வழிகளில் இழுக்கப்படலாம். ஈடுபடுத்தப் படலாம். அப்படிப்பட்ட நிலையில் இந்திய றோ அதிகாரிகள் தங்களது புலனாய்வு நடவடிக்கை களால் இலங்கையின் பாதுகாப்புத் தரப்புக்கு தகவல் கொடுக்கலாம்.

அதன் மூலம் முஸ்லிம் இளைஞர்கள் பிழை யான வழிகளில் செல்வது முளையிலேயே கிள்ளி எறியப்படலாம். ஆனால் முஸ்லிம்க ளுக்கு எதிரான சக்திகள் முஸ்லிம் இளைஞர்கள் பிழையான வழிகளில் செல்வதையே ஊக்கு விக்கலாம். இலங்கையில் முஸ்லிம் பயங்கர வாதம் உள்ளது என்பதை உலகுக்குக் காட்டுவ தற்காக பொதுப்பலவும் அதன் கூட்டணிகளும் முஸ்லிம் இளைஞர்களை வலிந்து இழுக்கவும் சூழ்ச்சிகள் செய்து வருகின்றன.

தற்போது பாகிஸ்தானைக் கொண்டு இலங்கை முஸ்லிம் இளைஞர்களைத் தப்பான வழிகளில் பயன்படுத்த முயற்சி மேற்கொள்ளப் படலாம். குறிப்பாக கிழக்கு மாகாண முஸ்லிம் இளைஞர்கள் அந்தச் சதிவலைகளிலிருந்து தப்பிக்க வேண்டும்.

அப்படி முஸ்லிம் இளைஞர்களில் எவராவது முயற்சி மேற்கொள்ள முனைந்தால் அம்முயற்சி முளையிலேயே கிள்ளி எறியப்பட வேண்டும். முஸ்லிம் அரசியல்வாதிகள், முஸ்லிம் அமைப் புகளைச் சேர்ந்தோர், பள்ளிவாசல்களின் நிர் வாகிகள், முஸ்லிம் சமூக நலனில் நாட்டம் கொண்டோர் ஆகியோர் இந்த விடயத்தில் அதிக கரிசனை காட்ட வேண்டும். அல்லாது போனால் முஸ்லிம் சமூகம் அதற்காக அதிக இழப்புக் களைச் சந்திக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுவிடலாம். எச்சரிக்கை.

**இலங்கையில் சிங்களத் தலைவர்கள் யாருமே நேர்மை, நாணயமிக்கவர்கள் அல்லர். பதவி ஆசையே ஒரே குறிக்கோள். எனவே தீர்வைத் தந்து தங்கள் அரசியல் ஆசையில் மண்ணைப் போட முன்வர மாட்டார்கள். எனவே, சர்வதேசம் தாமதியற்றி உலகின் அங்கீகாரம் பெற்ற தன் சட்டமான 12ஆம் விதியை நிறைவேற்ற முன்வர வேண்டும். தமிழர் ஆயுதப் போர் சர்வதேச சட்டத்தில் 12(2) விதியே ஒழியப் பயங்கரவாதமல்ல.**

■ எஸ்.ராமன்



# தமிழர் ஆயுத போராட்டமும் சர்வதேச சட்ட அங்கீகாரமும்

எந்தவொரு பிரஜையும் இனம், மதம், மொழி, சமயம், அரசியல் அபிப்பிராயம், பிறந்த இடம் போன்ற எக் காரணம் கொண்டும் பாரபட்சமாக நடத்தப்பட கூடாது என்பது சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தின் 12ஆம் பிரிவின் உறுதிமொழியாகும்.

இதற்கு மாறாக ''ஒவ்வொருவருக்கும் அங்கீகரிக்கப்பட்டுள்ள மொழி, இன, மத, உரிமையும் அங்கீகரிக்கப்படாதவிடத்து போராடும் உரிமையும் அதற்காக வன்முறையை உபயோகிக்கும் உரிமையும் சர்வதேச மனித உரிமைச் சட்டத்தின் 12(2) பிரிவு அங்கீகரிக்கிறது. சர்வதேச மனித உரிமைகள் சட்ட அமைப்புக்குள் இலங்கைத் தமிழர் நிலை என்ன? நியாயமென்ன? என்பதைப் பார்ப்போம்.

இலங்கைத் தமிழர்கள் இலங்கையின் பூர்வீகக் குடிகளாக பௌத்த பாளி நூல்களால் அங்கீகரிக்கப்பட்ட இயக்கர், நாகர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் இன்றைய வாரிசுகள். ஆரம்பம் முதல் கி.பி. 1815ஆம் ஆண்டும் வரை இலங்கையை ஆண்ட இனம் தனக்கெனத் தனிமொழி, மதம், தேசிய இனம் என்பது அங்கீகரிக்கப்பட்ட ஒன்று. இதற்கான வரலாற்றுத் தேடலில் நாம் பெற்ற ஆதாரங்கள்.

இலங்கை, உலகின் ஆதி பூமியான லெமூரியா என்றழைக்கப்பட்ட கண்டத்தில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தங்களினால் சிதறி கடலில் அமிழ்ந்தவை போக அகன்றவை அகல தப்பிப் பிழைத்த எஞ்சிய பாகமாகும். பௌத்தம் இந்த நாட்டினுள் கால் பதிப்பதற்கு முதல் இலங்கையின் சுதேசிகளாக இனங்காணப்பட்டவர்கள் இயக்கர், நாகர் என்ற திராவிடர்கள். இதை மகாவம்சம், சூளவம்சம் என்ற பாளி நூல்களும் ஏற்று அங்கீகரித்துள்ளன.

### புத்தர் ஒரு சிவபக்தன்

கடல்கோளினால் பெரும் நிலப்பரப்பு கடலடியில் சங்கமமான பின் மிதந்த பாகமான இலங்கை முதல் இமயம்வரை விரிந்த பூமியில் வாழ்ந்த மக்கள் அனைவரும் திராவிடர்கள் என அறிஞர்களான ரசிலின், றப்சன், கெக்கல் போன்றோர் குறிப்பிட்டுள்ளார்கள். கௌதம புத்தர் பிறந்து வளர்ந்து வாலிபனாகி திருமணம் முடித்து ஒரு பிள்ளைக்கு தந்தையாகும்வரை, அவர் ஒரு சிவபக்தன் என்கிறது வரலாறு. அவர் தனது குலத்தாரோடு ஏற்பட்ட பிணக்கினால் நாடு கடத்தப்பட்டு, காட்டு வாழ்க்கை மூலம் தவம் செய்து, ஞானம் பெறும்வரை விஜயன் ஒரு சிவ வழிபாட்டுக்காரர். சிவ வழிபாட்டுக்கார்களான தன் குலமக்கள் தன்னை வெறுத்து ஒதுக்கி நாடுகடத்திய வேதனையால் சித்தார்த்தர், சினமும் சீற்றமும் அடைந்து பௌத்தத்தைக் கருவாக்கி உருவாக்கினார் என்பது வெள்ளிடைமலை.

விஜயன் கலிங்க நாட்டு அரசன் கடப்பலி, கடமை தவறியவன், கட்டுபாடற்ற போக்கிலி, அடங்காப்பிடாரி, மக்களாலும், மன்னனாலும் வெறுக்கப்பட்டு ஒதுக்கப்பட்டவன். பெற்ற தந்தையாலே நாடு கடத்தப்பட்டவன். இவன் இலங்கையில் கால் பதித்த நேரம் சித்தார்த்தன் ஞானம் பெற்றார் என பௌத்த நூல்கள் கூறுகின்றன. இதை நம்பும் தன்மை கேள்விக் குறியானது. இன்று ஊடகத்துறை வளர்ந்துள்ள அளவுக்கு அன்று வளரவில்லை.

### உலக மகா பகிடி

இந்நிலையில் மக்களால் வெறுத்து ஒதுக்கி நாடுகடத்தப்பட்ட சிற்றரசன் சித்தார்த்தன், ஞானம் பெற்ற அதேநேரத்தில் மன்னனாலும், மக்களாலும் வெறுத்து ஒதுக்கி நாடு கடத்தப்பட்ட விஜயன் இலங்கைக் கரையில் கால் பதிப்பதை யார் நேரில் கண்டார்கள்? இவரும் அவர்களது இரத்த உறவாலே நாடு கடத்தப்பட்டவர்கள்.

இவர்கள் மேல் எவரும் அனுதாபம் கொண்டாரில்லை. எதிர்ப்பார்ப்புகளும் இல்லை. எனவே, ஒருவர் ஞானம் பெறும் அதே நேரத்தில் விஜயன் ஈழ மண்ணில் கால்பதித்தான் என்பதை துல்லியமாக அறியும் ஆர்வமும், தெளியும் நோக்கும் எவருக்குமே வந்திராது. எனவே, இது கற்பனைக்கு அப்பாற்பட்ட உலகபகிடியாகும்.

விஜயன் கதை ஒரு கட்டுக்கதை என பௌத்த புத்திஜீவிகள் ஒதுக்கிவிட்டார்கள். நாமும் அதை ஏற்றுக் கொண்டு விஜயன் மூலம் இலங்கையில் பௌத்தம் ஆரம்பிக்கப்படவில்லை என்பதை உறுதிசெய்வோம். கலிங்கத்தில் மிருகவெறி கொண்டு மனிதனை வேட்டையாடி வெற்றிக்களிப்பில் மிதந்த மா மன்னன் அசோகனை சாது புத்தர் சந்தித்து, யுத்தத்தின் கொடுமையையும், கடுமையையும் எடுத்துக்காட்டி தன்னுயிர் போல் மண்ணுயிரைக் காக்க வேண்டிய காவலன் காட்டு மிருகங்களை வேட்டையாடுவதுபோல் அடாத செயலில் ஈடுபடுவது தகாத செயல் தர்மமல்ல. அது அதர்மமானது. அரசன் செய்யத் தகாதது எனத் தரும உபதேசம் செய்தார்.

### புத்தர் உபதேசம்
### அசோகன் சரணாகதி

கௌதம புத்தரின் தர்ம உபதேசத்தை உள்வாங்கிய அசோகன் வெட்கி வேதனைப்பட்டு செய்த பாவத்திற்குப் பரிகாரம் தேட பகவான் புத்தரையே சரணாகதியடைந்து பௌத்தத்தை உலகமெல்லாம் பரப்ப முன்வந்தான். அக்காலத்தில் இலங்கையில் தந்தையைக் கொலை செய்துவிட்டு ஆட்சியை தீஸன் என்னும் நாகமன்னன் கைப்பற்றி ஆண்டான். அவனுக்கும் அசோகனுக்கும் ஏற்பட்ட நட்பால் அசோகன் தன் மூத்த தாரத்தின் மக்களான மஹிந்தனையும், சங்கமித்திரையையும் இலங்கைக்கு அனுப்பி பௌத்த போதனையை முடுக்கிவிட்டான்.

இலங்கையில் பௌத்தம் காலூன்றிய காலம் தேவநம்பியதீஸனின் காலமே ஒழிய விஜயனின் காலமில்லை. பௌத்தத்தைப் பரப்ப வந்த மஹிந்தனும் சங்கமித்திரையும் துறவிகள். எனவே, வாரிசுகள் இல்லை. அன்று உலகில் எந்த மூலையிலும் சிங்களம் என்ற மொழியோ, சிங்களவர் என்ற இனக் குழுவோ கிடையாது. இருந்தவர் அனைவரும் இயக்கர், நாகரே ஒழிய வேறு எந்த இனத்தவருமல்லர்.

### தமிழர் - சிங்களவர்
### ஒரே இனத்தவர்கள்

''தமிழர், சிங்களவர் என்போர் வேறுபட்ட இனத்தவரல்லர். இருசாராரும் ஒரே இனத்தவர்கள். தென்னிந்தியாவிலிருந்து வந்துள்ள திராவிடர்கள் அதிகமாகக் கலந்துள்ள ஒரே இனம் சிங்கள இனம்'' என அறிஞரும் மானிடவியலாளரும் பௌத்த, சிங்களவரான ஜீ.ஒபயசேகர கூறியுள்ளார்.

பூர்வீகச் சிங்களவர்கள் பெரும்பான்மையோர் திராவிடரும் ஒரு சிறுதொகையினர். மகதநாட்டினரும் ஆவர். சிங்களவர் நடை உடை பாவனையெல்லாம் தமிழரை ஒத்திருக்கின்றன. சிங்களமொழியும் தமிழும் மகத நாட்டு மொழியும் இணைந்த மொழியாகும் எனக் கூறியுள்ளவர் சாமானியமானவரல்ல. இலங்கையின் வரலாறு எழுதிய மேலை நாட்டு அறிஞரான ரி.பிரிட்டோ.

### பௌத்தம் உருவாகியது எப்படி?

இனி பௌத்த சிங்களே என்று எவ்வாறு உருவாகியது என்பதைப் பார்ப்போம். இலங்கை முதல் இமயம் வரை வாழ்ந்தவர்கள் திராவிடர்கள். நாகமன்னன் தேவநம்பிய தீஸன் காலத்தில் இலங்கைக்கு அசோக மன்னனின் மகளும் மகனுமான சங்கமித்திரை, மகிந்தன் வந்து பௌத்த்ததை பரப்பினார்கள். இவர்கள் இருவரும் துறவிகள். எனவே, வாரிசு இல்லை. இறந்ததோடு முடிந்துவிட்டது அவர்களது வரலாறு. ஆனால், பௌத்தத்தை ஏற்றவர்கள் இலங்கைக் குடிகளான இயக்கர், நாகர். அதாவது, இலங்கை மக்களின் தொழில் கறுவாச் செய்கையாக இருந்தது. இதை வாங்கவும் விற்கவும் வந்த ஆரியர்கள் தங்கள் மொழியான சமஸ்கிருத்தில் 'கறுவாவுக்கு சிங்களே' என்று பெயர்.

வடநாட்டு வர்த்தகர்கள் தமிழ் மொழியே அல்லாத இலங்கையின் அன்றைய பெயரான எல்லத்தில் பேசப்பட்ட மொழியான எழுவோ தெரியாததால் தங்கள் மொழிப்பெயரான சிங்களே என்பதை பயன்படுத்தினர். சிங்களே என்ற பெயர் முதன் முதலில் நாட்டுக்கு மட்டும் பெயராக இருந்தது. இப்பெயர் காலகட்டத்தில் பிரபல்யமாகி கமம் செய்பவர்களை கமக்காரர் என அழைப்பதுபோல கறுவாத் தோட்டத் தொழிலாளர்களை ஆரியர் சிங்களவர் என்றார்கள். அதன் பின்னர் கறுவாத் தோட்டத் தொழிலாளர்கள் பேசிய கொச்சை எலுமொழி சிங்களம் எனப்பட்டது. 6ஆம் - 7ஆம் நூற்றாண்டளவில் சிங்களே, சிங்களவர், சிங்களம் என்ற மொழி வாரித் தேசியம் ஒன்றைத் தோற்றுவித்தது.

### தமிழர்களின் தாய் வீடு

தோன்றிய நாள்முதல் தேவநம்பியதீஸன் காலம்வரை இலங்கை, தமிழர்களின் தாய் வீடு. தேவநம்பியதீஸன் காலம்முதல் கி.பி. 10ஆம் நூற்றாண்டுவரை இலங்கை தமிழர் - பௌத்த தமிழர்களின் தாய்வீடு. கி.பி. 1505 தொடக்கம் இன்றுவரை தமிழர், சிங்களவர், முஸ்லிம்கள், பறங்கியர் மலாயர்கள் தாய் வீடாக வளர்ச்சிகண்டுள்ளது.

ஆட்சியைப் பொறுத்தமட்டில் இயக்கர், நாகர், தமிழர் (சேரர், சோழர், பாண்டியர், பல்லவர்) சிங்களவர், போர்த்துக்கீசர், ஒல்லாந்தர், பிரித்தானியர் ஆட்சிசெய்துள்ளனர். இலங்கையின் முதல் மன்னன் இராவணன். கடைசி மன்னன் ஸ்ரீ விக்ரமராஜசிங்கன் என்ற கண்ணுச்சாமிவரை தமிழர்கள். இதில் கலிங்க நாட்டார் ஆட்சியையே சிங்களவர், தங்கள் ஆட்சி அரச பரம்பரை எனக் கூறி வருகிறார்கள். ஆனால், கலிங்கமோ, வங்காளமே என்றுமே சிங்கள நாடல்ல. சிங்களவர் இல்லாத நாட்டிலிருந்து வந்தவர்கள் எவ்வாறு சிங்களவராக இருக்கமுடியும்? கடைசியாக வந்து இலங்கையை ஆண்ட கலிங்கமகான் தமிழனானால் அதற்கு முதல் வந்து இலங்கையை ஆண்டவர்கள் எவ்வாறு சிங்களவராக முடியும். வரலாற்றில் குழப்பங்கள் நிறைந்த இனமாக இருப்பது சிங்கள இனமாகும்.

தமிழர்கள் அப்படியல்ல. உலகம் தோன்றிய நாள் முதல் இன்றுவரை இந்த மண்ணின் மைந்தர்கள். பிறந்து வளர்ந்து வாழ்ந்து ஆண்டு அனுபவித்தவர்கள். தரமான வரலாறு, தாயக உரிமையும் உடையவர்கள்.

### திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம்

திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம் மூலம் வன்னி, திருமலை, அம்பாறை போன்ற தமிழ் பகுதிகள் சுதந்திரத்தின் பின் சிங்களவர் பிரதேசம் ஆக்கப்பட்டு விட்டன. சிங்களமொழிச் சட்டத்தின் மூலம் தமிழரின் வேலைவாய்ப்பு பறிக்கப்பட்டது.

1983ஆம் ஆண்டு ஜனாதிபதியால் வழங்கப்பட்ட பாடநூலில் 1948ஆம் ஆண்டு இலங்கை அடைந்த சுதந்திரம் சிங்களவரால் மட்டுமே பெறப்பட்டதென்றும் அதைச் சிங்களவர் மட்டுமே அனுபவிக்க வேண்டுமென்றும் எழுதப்பட்டிருந்தது. இவ்வாறு பிஞ்சு உள்ளத்திலேயே நஞ்சைப் பாய்ச்சும் நயவஞ்சகர்கள் நாட்டை ஆண்டால் நாடு உருப்பெறுமா?

சுதந்திரம் பெற்ற 64 ஆண்டுகளில் சிங்களவர் செய்த கொடுமைகள் பல. நான்கு இனத்தவர்களுக்கும் சொந்தமான இலங்கையைத் தங்கள் நாடு எனக் கூறும் சர்வாதிகாரத்தை எதிர்த்தே தமிழர் அறவழியில் 30ஆண்டுகள் போராடினர். பலன் 1957 இல் பண்டா - செல்வா ஒப்பந்தம், 1967இல் டட்லி - செல்வா ஒப்பந்தம், சிறிமா - செல்வா பேச்சுகள் மூலமான கனவான் ஒப்பந்தம். அத்தனை ஒப்பந்தங்களும் பேச்சுகளூடாக சிங்களத் தலைமைகளோடு செய்துகொண்ட ஒப்பந்தங்கள் அமுல் செய்யப்படவில்லை.

### தர்மத்தில் நம்பிக்கை
### கொண்ட தமிழர்கள்

சிங்களத் தலைமகளின் அஹிம்சை வழி அடுக்கடுக்காகத் தோல்வி கண்ட பின்பே சர்வதேச மனித உரிமைச் சட்டம் 12(2) பிரிவு காட்டிய பாதையைத் தமிழ் இளைஞர்கள் கையில் எடுத்தார்கள். 1983 ஆம் ஆண்டு ஆடி மாதம் ஐக்கிய தேசியக் கட்சி நடத்திய இன வெறியாட்டமே தர்மத்தில் நம்பிக்கை கொண்ட தமிழ் இளைஞர்களை துப்பாக்கி ஏந்தவைத்தது என்பதை முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க நாடாளுமன்றத்தில் கூறினார். இக்கொடுமையை எதிர்த்து இந்தியா, இலங்கை அரசைத் தட்டிக் கேட்டு 1987 இல் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தைச் செய்தார்கள். பலன் பூச்சியமாகும். இன்னும் என்ன பேச்சிருக்கிறது. பேசிப் பேசித் தீர்வு சம்பந்தமான ஒப்பந்தங்கள் செய்து ஏமாந்த பின்பும் பேசுவது முட்டாள்தனம்.

### தீர்வு காண்பதில்
### சர்வதேசத்தின் பங்குண்டு

உள்நாட்டுப் போர் இதற்கு நாம் என்ன செய்வதென சர்வதேசம் ஒதுங்கியிருக்காமல் ஒட்டுமொத்தமாகச் சேர்ந்து சர்வதேச மனித உரிமைச் சட்டம் 12(2)இல் அங்கீகரிக்கப்பட்ட ஈழத் தமிழர்களின் உரிமைப் போரை உருத்தெரியாமல் குலைத்து எறிந்தீர்கள். தமிழர்களின் உரிமைப் போரை ஊரெல்லாம் கூடி அழித்தீர்கள், அடக்கினீர்கள். ஆனால், போருக்கு மூலகாரணமான தமிழர் பிரச்சினைக்கு இதுவரை தீர்வில்லை. எனவே, தீர்வைப் பெற்றுத் தருவதில் சர்வதேசத்திற்குப் பூரண பங்குண்டு.

எனவே, இலங்கையில் சிங்களத் தலைவர்கள் யாருமே நேர்மை, நாணயமிக்கவர்கள் அல்லர். பதவி ஆசையே ஒரே குறிக்கோள். எனவே தீர்வைத் தந்து தங்கள் அரசியல் ஆசையில் மண்ணைப் போட முன்வர மாட்டார்கள். எனவே, சர்வதேசம் தானியற்றி உலகின் அங்கீகாரம் பெற்ற தன் சட்டமான 12ஆம் விதியை நிறைவேற்ற முன்வர வேண்டும்.

தமிழ் இளைஞர்கள் நடத்திய ஆயுதப் போர் சர்வதேச சட்டத்தில் 12(2) விதியே ஒழியப் பயங்கரவாதமல்ல.

# முள்ளிவாய்க்கால் நினைவு முற்றம்...

13ஆம் பக்கத் தொடர்ச்சி

கொடுத்தேன். ஈழத்தின் தேசியப் பறவை, தேசிய மரம், அந்த மக்கள் எவ்வளவு மகிழ்ச்சியாக வாழ்ந்திருந்தார்கள் என்பது முதல், யாழ் நூலகம் எரிப்பு, ஜெகன்- குட்டிமணி-தங்கதுரை படுகொலை, வெலிக்கடை சிறை உடைப்பு... என, தமிழர் போராட்ட வரலாற்றின் முக்கியமான நிகழ்வுகளை வரைந்தேன்.

இன்னொரு பக்கம் இறுதிப் போரில் மக்கள் கொல்லப்பட்ட விதம், ரசாயனக் குண்டுகள் கொத்துக் கொத்தாக உயிரைப் பறித்த விதம்... என சிங்கள ராணுவத்தின் வெறியாட்டத்தை ஆவணம் ஆக்கினோம். அந்தக் கோட்டோவியங்களை ஆதாரமாக வைத்து சிற்பங்களை வடிவமைத்தனர். ஈழப் படுகொலைகள் குறித்து உலகம் இன்று வரை மௌனமாக இருக்கிறது. ஆனால், இந்த முள்ளிவாய்க்கால் முற்றம், ஈழப் படுகொலையின் பின்னணியையும் வேதனைக் காட்சிகளையும் தலைமுறைகள் தாண்டியும் மக்களிடம் கொண்டு சேர்க்கும்!" என்கிறார் வீரசந்தானம்.






முற்றத்தில் சிற்பங்களை வடிவமைத்திருப்பது, மாமல்லபுரம் ஸ்தபதி முருகன் குழுவினர். முருகனிடம் பேசினேன்...

"பொதுவாக, சிற்பம் செய்ய கறுப்புக் கல்தான் சிறந்தது. அதிலும் இறுகிய கல் வேண்டும். தமிழகம் முழுக்க அப்படியான கல் தேடி அலைந்தோம். புதுக்கோட்டையில் அஸ்திவாரம் அமைக்கப் பயன்படும் வெள்ளைக் கல்லையும், ஊத்துக்குளியில் சிற்பங்களுக்கான கறுப்புக் கல்லையும் தேர்ந்தெடுத்தோம். தமிழ்ப் பாவை சிலையை அமைக்க 55 தொன் எடையுள்ள கல்லை ஊத்துக்குளியில் இருந்து கொண்டு வந்து, சீராக்கி, செதுக்கி முடித்தபோது, அது 40 தொன் எடையோடு நிலை கொண்டது. நூற்றாண்டுகள் பல கடந்தாலும் நிலைத்து நிற்கும் தரத்தோடு உருவாக்கப்பட்டிருக்கின்றன இந்தச் சிற்பங்கள்!' என்கிறார் முருகன்.

நவம்பர் 8, 9, 10 திகதிகளில் மூன்று நாள் விழாவாக திறப்பு விழா காண இருக்கிறது 'முள்ளிவாய்க்கால் நினைவு முற்றம்'.

"எந்த அரசியல் சார்பும் இல்லாமல், ஒட்டுமொத்தத் தமிழினத்தின் விழாவாக இதை அரங்கேற்ற இருக்கிறோம். பாரபட்சம் இல்லாமல் அனைவருக்கும் அழைப்பு அனுப்புவோம். ஆனால், ஈழப் படுகொலைகளுக்குத் துணைபோன துரோகிகளுக்கு நாங்கள் அழைப்பு அனுப்பவில்லை. ஏனென்றால், இன்னொரு முறை இப்படியான கொலைகள் நடக்காமல் இருக்க, எதிரிகளிடம் மட்டும் அல்ல, துரோகிகளிடமும் எச்சரிக்கையாக இருக்க வேண்டியிருக்கிறது!" என்கிறார் பழ.நெடுமாறன்.



வீரசந்தானம்



முருகன்

அதை ஆமோதிப்பதுபோல, முற்றத்துச் சிற்பங்களில் அறைந்து மோதுகிறது அனல் காற்று!

**டி.அருள் எழிலன்**

# TAMIL RADIOs and TV in AUSTRALIA

| சேவை | Station | METRE/CHANNEL | BROADCASTING TIME | | CITY | ALSO THROUGH |
|---|---|---|---|---|---|---|
| | | | DAY | TIME | | |
| *SBS* தமிழ் வானொலி | *SBS* | *FM 97.7 Sydney* | *SUNDAY* | *Differ to each city* | *All Cities* | *ATBC & Inpathamil Oli* |
| தமிழ் முழக்கம் *(Tamil Mullkam)* | *Radio 2000* | *FM 98.5* | *SATURDAY* | *8.00-10.00 PM* | *Sydney* | *ATBC* |
| முத்தமிழ் வானொலி *(Muthamil Malai)* | *2CCR* | *FM 90.5* | *SUNDAY* | *6.30-8.00 PM* | *Sydney* | *Inpaththamil Oli* |
| இன்பமான இரவினிலே | *SWR* | *FM 99.9* | *FRIDAY* | *10.00-12.00 AM* | *Sydney* | *ATBC* |
| உதய கீதம் *(Uthaya Keetham)* | *SWR* | *FM 99.9* | *FRIDAY* | *12.00-02.00 PM* | *Sydney* | *ATBC* |
| இன்பத்தமிழ் ஒலி *(Inpatamil Oli* | *Inpatamil* | *SPECIAL METRE* | | *7 DAYS 24 Hours* | *3 Cities* | *Also NZ thru Optus* |
| *AUS Tamil Broadcasting Co-op* | *ATVC* | *SPECIAL METRE* | | *7 DAYS 24 Hours* | *3 Cities* | *Also NZ thru Optus* |
| தமிழ்க் குரல் *(Tamil Kural)* | *3CR* | *AM 855* | *MONDAY* | *6.30-8.00 PM* | *Melbourne* | *Inpaththamil Oli* |
| நிதர்சனம் *(Manifest)* | *3CR* | *AM 855* | *SATURDAY* | *12.00-12.30 PM* | *Melbourne* | *Inpaththamil Oli* |
| தமிழ் ஓசை *(Tamil Osai)* | *3ZZZ* | *FM 92.3* | *THURSDAY* | *8.00-9.00 PM* | *Melbourne* | *Inpaththamil Oli* |
| சங்கநாதம் *(Sanganatham)* | *Voice Of Dan* | *FM 97.1* | *SUNDAY* | *8.00-10.00 PM* | *Melbourne* | *ATBC* |
| வானிசை *(Vaanisai)* | | *FM 88.9* | *FRIDAY* | *6.00-8.00 PM* | *Melbourne* | *ATBC* |
| வானமுதம் *(Vaanamutham)* | | *FM 88.6* | *TUESDAY* | *6.00-8.00PM* | *Melbourne* | *Inpaththamil Oli* |
| தமிழ் ஒலி *(Tamil Oli)* | *4EB* | *FM 98.1* | *SUNDAY* | *9.00-10.00 PM* | *Brisbane* | |
| தமிழ் ஒலி *(Tamil Oli)* | *4EB* | *FM 98.1* | *FRIDAY* | *5.00-6.00 PM* | *Brisbane* | |
| கன்பரா தமிழ் வானொலி | *CMS* | *FM 91.1* | *THURSDAY* | *8.00-9.00 PM* | *Canberra* | |
| கன்பரா தமிழ் வானொலி | *CMS* | *FM 91.1* | *SATURDAY* | *11.00-12.00 Noon* | *Canberra* | |
| கன்பரா தமிழ் வானொலி (இளைஞர்) | *CMS* | *FM 91.1* | *SUNDAY* | *11.00-12.00 Noon* | *Canberra* | |
| தமிழ் ஒலி *(Tamil Oli)* | *6EBA* | *FM 95.3* | *MONDAY* | *7.30-8.00 PM* | *Perth* | |
| தமிழ்ச் சோலை *(Tamil Solai)* | *6EBA* | *FM 95.3* | *FRIDAY* | *10.30-12.00 PM* | *Perth* | |
| தமிழ்ச் சங்க வானொலி | *Top FM* | *FM 104.1* | *SATURDAY* | *8.00-9.00 PM* | *Darwin* | |
| தமிழ்ச் சங்க வானொலி | *Top FM* | *FM 104.1* | *MONDAY* | *7.00-8.00 PM* | *Darwin* | |
| *GTV* | *Optus Channal* | *SPECIAL CHANNEL* | *7 DAYS* | *24 Hours* | *All Cities* | *Also in NZ* |

## அடங்காப்பற்று...

14ஆம் பக்கத் தொடர்ச்சி

சித்திரம் போல தனது முகபாவங்களிலும், நடிப்பிலும் வெளிப்படுத்தியிருந்தார். உளமார்ந்த பாராட்டுக்கள் யோகனா!

அடங்காப்பற்று நிகழ்விற்கு முழுமையாக நடனவடிவமைப்பு செய்தவர் சேரன் சிறிபாலன் அவர்கள். நேர்த்தியாகக் கதையை நகர்த்தக்கூடியவாறு நடனவடிவமைப்பைச் செய்திருந்தார். குறிப்பாக, போர்க்களத்தைச் சித்தரிக்க அமைக்கப்பட்டிருந்த நடனம் மிகவும் சிறப்பாக இருந்தது. நாட்டியக்காரர்கள் அதை வெளிப்படுத்திய விதம், பார்வையாளர்களுக்கு ஆக்ரோசமான உணர்வை நிச்சயம் கொடுத்திருக்கும். அவை தவிர, புஸ்பாஞ்சலியும் இறுதிப்பாகமும் நடனவடிவைப்பின் சிறப்பை எடுத்துக்காட்டும் சான்றுகளாக இருந்தன.

நாட்டிய நாடகத்தின் பாடல்கள், எழுத்து சிந்து சேரன். "வென்றவன் வரலாற்றை எழுதுகின்றான்" என்ற உத்வேகத்தோடு தொடங்குகின்றது அவருடைய எழுத்து. உணர்வுகளை சொற்களில் கொட்டி வெளிப்படுத்திய அவருடைய எழுத்துக்கள் தனித்துவமானவை.

கதையோட்டத்தை நகர்த்திச்செல்லப் பின்னணிக் குரல் வழங்கிய திரு சிறிபாலன், சஞ்சயன் குலசேகரம் இருவரும் சிறப்பான உச்சரிப்புடன் உணர்வுகைளயும் வேறுபடுத்திக் காட்டியிருந்தனர்.

பின்னணி வாத்தியக் கலைஞர்களின் இசைக்கோர்ப்பு அற்புதமாக இருந்தது. கணீர்க்குரலில் ஜதி சொன்ன ஜனகன் ,கிரிஸன் சேகரம், சுரேஸ் சிதம்பரம் ஆகியோர் நாட்டியத்திற்குப் பக்கபலமாக இருந்தனர். பின்னணிப்பாடல்களைப் பாடிய பாரத் மோகன் அவர்களது குரல்வளம் இனிமையாக மட்டுமல்ல, உணர்வுகளின் கதம்பமாகவும் இருந்தது. குறிப்பாக "அன்னை மண்ணை இழந்திட மாட்டோம் ......" என ஏக்கத்துடன் அவர் பாடியது மெய்சிலிர்க்க வைத்ததுடன் எம் அன்னை மண்ணை ஒருமுறை கண் முன்னே கொண்டுவந்தது. ஏதோ ஒரு இனம்புரியாத ஏக்கம் அந்தப்பாடலில் இருந்தது. ஒரு தேர்ச்சி பெற்ற வயலின் கலைஞராக திரு நாராயணதாஸ் கோபிதாஸ் அவர்களின் வயலின் இசை, பல இடங்களில் அரங்கத்தைக் கட்டிப்போட்டது. துக்கத்தை வெளிப்படுத்திய சந்தர்ப்பங்களில் எல்லாம் வயலின் தனித்துவமாக இருந்தது. இசை தனித்து நின்று உணர்வைக்கொடுத்தது.

நாட்டியத்தின் களச்சூழலுக்கு ஏற்ற வகையில் ஆடைவடிமைப்புச் செய்யப்பட்டிருந்தது. வடிவமைந்திருந்தவர் சேரன் சிறிபாலன். அந்த வடிவைப்பிற்கு ஏற்ப, எந்தவிதமான சன்மானமும் வாங்காமல், நன்கொடையாக வழங்கியிருந்தார் Fashion Mart Toongabbie உரிமையாளர் மயூரன் தில்லைநாதன் அவர்கள்.

மொத்தமாக ஏழுபேர் கொண்ட குழுதான் நாட்டிய நாடகத்தை நகர்த்திக்கொண்டிருந்ததால், சூழலுக்கும் கதாபாத்திரங்களுக்கும் ஏற்ப உடையிலும், தோற்றத்திலும் மாற்றங்களைச் செய்யாதது சில இடங்களில் உறுத்தலாக இருந்தது. குறிப்பாக, காக்கை வன்னியன் பண்டார வன்னியனை வஞ்சகமாகக் கூட்டிக்சென்று, கொலை செய்யக்கொடுக்கும்போது, முன்னர் பண்டார வன்னியனுடன் நின்று வெள்ளையருக்கு எதிராகப் போர்புரிந்த கதாபாத்திரத்தை ஏற்று நடித்தவர்கள், உடையிலோ தோற்றத்திலோ எந்தவிதமான மாறுபாடும் செய்யாமல் அப்படியே வந்து பண்டார வன்னியனைக் கொன்றது ஏற்புடையதாக இருக்கவில்லை. அது பண்டார வன்னியனுடன் நின்றதாகச் சொல்லப்பட்ட தமிழர் எல்லோரும் காக்கை வன்னியனுடன் சேர்ந்து நின்று பண்டார வன்னியனைக் கொலை செய்ததைப்போன்ற ஒரு வரலாற்றுப் பிறழ்வைக் காட்சிப்படுத்தியிருந்தது. இது கண்டிப்பாகத் தவிர்க்கபட்டிருக்க வேண்டும்.

கதையோட்டத்திற்கு ஏற்றவாறு ஆங்கிலத்திலும் பின்னணிக் குரல் கொடுத்தது நிகழ்விற்கு மேலும் சிறப்பைக் கொடுத்தது. வேற்று மொழியாளர்களுக்கு மட்டுமன்றி, எமது இளைய தலைமுறையும் எம்முடைய வரலாற்றைப் புரிந்து கொள்வதற்கு வாய்ப்பாக அமைந்தது. நிகழ்வின் மூலம் சேகரிக்கப்படும் நிதி யாருக்கானது என்பதைக் காட்டக்கூடியவகையில், பயனாளர்களின் வாக்குமூலம் தாங்கிய பத்து நிமிடக் காணொளி போட்டுக் காண்பிக்கப்பட்டது. மனதை நெருடிய அந்தக் காணொளி, நிகழ்வின் நோக்கத்தை எடுத்துக்காட்டிய ஒரு சிறப்பான சான்று.

மொத்தத்தில் ஒரு கூட்டுமுயற்சியாக, நீண்டநாள் உழைப்பைக்கொடுத்து ரசனா நடனப்பள்ளி நடத்திய அடங்காப்பற்றின் இலக்கில் தெளிவிருந்தது, நடிப்பில் நேர்த்தியிருந்தது.

தாயகமக்களின் மேம்பாட்டுக்கான நிதிசேகரிப்பு என்ற பொதுப்படையான அறிவிப்பைக்கொண்ட ஒரு நிகழ்வைப்போல இல்லாமல், ஆரம்பத்தில் கூறியதைப்போல தெளிவான இலக்குடன் செய்யப்பட்ட நிகழ்வு என்பதை நிஷரூபிக்கக்கூடிய வகையில் நிகழ்வு நிறைவுசெய்யப்பட்டது. மூன்றுமாதத்திற்கு மேலாக கொடுக்கப்பட்ட கடின உழைப்பின் விளைவாக, நடாத்தப்பட்ட இந்த நிகழ்வின் மூலம் சேகரிக்கபட்ட நிதி $75,942 Patchwork தலைவர் அவர்களிடம் கையளிக்கப்பட்டது. காசோலையை நிகழ்வின் பிரதான அனுசரணையாளரான EXCELLENT JEWELLERY உரிமையாளர் திரு சௌந்தர் அவர்கள் Patchwork தலைவர் அவர்களிடம் வழங்கினார். எதற்காக இந்த நிகழ்வு நடாத்தப்பட்டதோ அதை தெளிவாக நிறைவேற்றிய அந்த வெளிப்படைத்தன்மை நிகழ்வின் பிரதான சிறப்பம்சம்.

துணிந்து எழு, நிமிர்ந்து நில், தடையுடை, தொடர்ந்து செல், அண்ணன் காட்டிய வழியில்.....என்று சொன்ன அடங்காப்பற்று தமிழரின் அடங்காப்பற்றை மீண்டும் ஒருமுறை புடம்போட்டுக்



காட்டியிருக்கின்றது. ரசனா நடனப்பள்ளிக்கும், ஒத்துழைப்புக் கொடுத்துப் பயணித்த அனைவருக்கும் நல்வாழ்த்துக்கள்.

இதுபோன்ற இலக்கில் தெளிவான, நிகழ்வில் நேர்த்தியான, செயற்பாட்டில் வெளிப்படையான நிகழ்வுகளுக்கு மக்கள் மத்தியில் முழுமையான ஆதரவு எப்போதும் உண்டு. எல்லாவற்றையும் இழந்து ஒரு வெறுமை நிலைக்குள் தள்ளபட்டிருக்கும் இன்றைய சூழலில், தாம் செய்கின்ற உதவிகள், நன்கொடைகள் முழுமையாக தாயகத்து உறவுகளுக்குச் சென்றடையுமா? என்பது புலம்பெயர் தமிழர்களிடம் உள்ள கேள்வி. அந்த ஆதங்கத்தைத் தகர்த்து, அவர்களுடைய நம்பிக்கையைக் கட்டி எழுப்பக்கூடியவகையில், நிகழ்வின் மூலம் சேகரிக்கப்பட்ட நிதியை அதற்குப் பொறுப்பானவர்களிடம் கையளித்து, அவ்வாறு கையளிக்கப்படும் நிதி எப்படி? யாருக்காகச் செலவு செய்யப்படுகின்றது என்பதையும் தெளிவாகக் காண்பித்த இந்த நிகழ்வின் வெளிப்படைத்தன்மை பராட்டுக்குரியது. இவ்வாறான நிகழ்வுகளை வரவேற்க மக்கள் தயாராகக் காத்திருக்கின்றார்கள். வாழ்வாதாரத்தை எதிர்பார்த்துக் காத்திருக்கும் தாயகத்து உறவுகளுக்கு உதவிகளை வழங்கத் தயாராகவிருக்கும் புலம்பெயர் மக்களுக்கிடையேயான நம்பிக்கையைக் கட்டி எழுப்பி, உதவித்திட்டங்களை எவ்வாறு முன்னெடுக்கலாம் என்பதற்கான சிறந்த வழிகாட்டலை வழங்கிய இந்நிகழ்வு ஒரு முன்னுதாரணம். தாயக மக்களுக்காகச் செய்யப்படும் எந்த நிகழ்வும் இப்படியான வெளிப்படைத்தன்மையைக் கடைப்பிடித்தால் ஒரு மாற்றம் நிச்சயம் நிகழும்.

இவ்வாறான நிகழ்வுகள் தொடர்ந்தும் நடைபெற அனுசரணையாளர்களும் மக்களும் தங்களுடைய முழுமையான ஆதரவை வழங்க வேண்டும்.

## மாநாட்டு அச்சம்...

06ஆம் பக்கத் தொடர்ச்சி

எச்சரிக்கையில்தான் தடுமாற்றம் தெரிகிறது. தனது குறைபாடுகள் அரங்கில் முன்வைக்கப்படுமாயின் அதனால் தனக்குப் பாதகமான நிகழ்வுகள் நேரலாம் என்ற அச்சம் தெரிகிறது.

இரண்டு ஆண்டுகளுக்கு ஒருதடவை நாடுகளின் தலைவர்கள் பொதுநலவாயத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்று வழி நடத்துகின்ற போதிலும் பொதுநலவாயத்தின் மதிப்புக்குரிய தலைவராக பிரிட்டன் அரசியே இருந்து வருகிறார். சம்பிரதான பூர்வமாக, அவர் கலந்துகொள்ளாத நிகழ்வு பூரணமாகாது. இம்முறையில் இலங்கையில் இடம்பெறப்போகும் மாநாட்டு நிகழ்வுகளிலும் பிரிட்டன் மகாராணியார் கலந்துகொள்ளப் போவதில்லை என்பது ஏற்கனவே எடுக்கப்பட்ட முடிவு. இது இலங்கைக்குச் சம்பிரதாயபூர்வமான பின்னடைவு என்றாலும், இளவரசர் மகாராணியாருக்குப் பதிலாக வருகை தரவுள்ளார் என்ற செய்திதான் இலங்கையின் விழுக்காட்டை தூக்கி நிறுத்தியுள்ளது.

### *மாநாட்டில் புயல் கிளப்பும் பிரிட்டன் பிரஜை கொலை*

ஆனால் அதில்கூட இலங்கை மகிழ்ச்சி கொள்ள முடியாத நிலையையே காணப்படுகிறது. 2011 ஆம் ஆண்டு இலங்கையில் வைத்துப் படுகொலை செய்யப்பட்ட பிரிட்டன் பிரஜையும், சர்வதேசச் செங்சிலுவைச் சங்கப் பணியாளருமான குராம் ஜய்க் தொடர்பாக இலங்கை அரசு எடுத்திருக்கும் நடவடிக்கைகள் பற்றி இளவரசர் சார்ள்ஸ் கேள்வி எழுப்பவுள்ளார் என்ற அறிவிப்பு இலங்கையைப் படாதபாடு படுத்துகிறது. 32 வயதான பிரிட்டன் பிரஜை காடையர்களால் கொல்லப்பட்டதற்கும் அவரோடிருந்த அவரின் நண்பி காடையர் குழுவால் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டதற்கும் இலங்கை அரசு எவ்வித நடவடிக்கையையும் இதுவரை மேற்கொள்ளவில்லை என்ற குற்றச்சாட்டு பிரிட்டன் இளவரசரால் முன்வைக்கப்படவிருக்கிறது.

குற்றம் புரிபவர்கள் தண்டனைக்குட்படாமல் தப்பிக்கும் நடைமுறை இலங்கையின் மரபாகிப் போய்விட்டதென்ற கடுமையான குற்றச்சாட்டுகள் உலக நாடுகளால் இலங்கை அரசுக்கு எதிராக முன்வைக்கப்பட்டுவரும் நிலையில் இளவரசரால் எழுப்பப்படவிருக்கும் வினா இலங்கையின் நீதி பரிபாலனத்துக்குப் பாரதூரமான பின்னடைவைக் கொடுக்கவல்லதாக அமையலாம். இந்தக் கொலை தொடர்பான வழக்கையும், 2006 இல் ஐந்து பல்கலைக்கழக மாணவர்கள் திருகோணமலைக் கடற்கரையில் வைத்துக் காரணமின்றிச் சுட்டுக்கொல்லப்பட்டமை தொடர்பான வழக்கையும் விசாரிக்கத் தொடங்கியிருப்பதன் மூலம் குற்றம் புரிவோர் தண்டனைக்குள்ளாகாமல் தப்பித்துக்கொள்ளும் மரபு இலங்கையில் இல்லை என்று நிறுவலாம் என அரசு நம்புகிறது.

### *தமிழகம் கொடுத்த அதிர்ச்சி வைத்தியம்*

இலங்கை அரசு தனது வியூகங்களை வகுத்துப் பொதுநலவாய மாநாடு நடத்துவதால் கிடைக்கக்கூடிய பலன்களைப் பூரணமாகப் பெற்றுக்கொள்ளும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டுக் கொண்டிருக்கையில் தமிழ்நாடு இலங்கை அரசுக்கு அதிர்ச்சி வைத்தியம் செய்திருக்கிறது. இடம்பெற்றுவந்த தொடர் போராட்டங்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனின் செவ்விகள் என்று பரபரப்பாகிக் கொண்டிருந்த தமிழகம் இலங்கையில் இடம்பெறும் பொதுநலவாய உச்சிமாநாட்டில் பிரதமர் மன்மோகன் சிங் கலந்துகொள்ளக்கூடாது என்று அதிரடித் தீர்மானம் ஒன்று ஏகமனதாக வியாழனன்று நிறைவேற்றியிருக்கிறது.

### *மன்மோகன் வரமாட்டார்*

இந்தத் தீர்மானத்தின் மூலம் பாரதப் பிரதமர் இலங்கைக்கு வருவாரா, மாட்டாரா என்ற இழுபறிக்கு அவர் வரமாட்டார் என்ற முற்றுப்புள்ளி ஏற்பட்டுள்ளதாகக் கருத இடமுண்டு. தமிழகத்தின் ஒருமனதான தீர்மானத்தை மீறி இலங்கையைச் சந்தோசப்படுத்தும் முயற்சியில் மன்மோகன் சிங் ஒருபோதும் இறங்கப் போவதில்லை என்பது தெளிவு. அவ்வாறு செய்வாரானால் தமிழ்நாட்டிலிருந்து ஆளுங் காங்கிரஸின் செல்வாக்கை அடியோடு அகற்றிவிடும் முயற்சியாகவே அது அமையும் என்பதும் அவர் அறியாததல்ல.

இந்தத் தீர்மானத்தை அடுத்து உடனடியாகவே இலங்கை இந்தியாவின்மேல் தனது வெறுப்பைக் காட்டியிருக்கிறது. சிலநாட்களுக்குமுன் இலங்கை வெளியுறவு அமைச்சஉ பீரிஸ் கூறிய அதே வாசகங்களை இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் இப்போது மீண்டும் கூறியிருக்கிறார். பொதுநலவாய மாநாட்டை இந்தியா புறக்கணிக்குமானால் அதனால் வரும் விளைவுகளை இந்தியா அனுபவிக்கவேண்டி வரும் என்றும் இந்தியா உலக அரங்கிலிருந்து தனிமைப்பட்டுவிடும் என்றும் தெரிவித்திருக்கிறார்.

### *முக்கிய மூன்று நாடுகளால் இலங்கைக்கு தலையிடி*

இலங்கையில் இடம்பெறவிருக்கும் பொதுநலவாயமாநாட்டு விடயத்தில் இலங்கைக்கு மூன்று பெரிய நாடுகள் தலையிடியாக அமைந்துள்ளன. ஒன்று கனடா, அது மாநாட்டை முற்றாகவே புறக்கணிக்கிறது. இரண்டு பிரிட்டன், அது மாநாட்டுக்கு வருகை தருகின்ற போதிலும் இலங்கைக்கு எதிரான சிக்கலைக் கிளப்பத் திட்டமிட்டிருக்கிறது. மூன்றாவது இந்தியா, இந்தியப் பிரதமரும் ஏறத்தாழ வரமாட்டார் என்றாகிவிட்டது. இந்த மூன்றும் பலம் பொருந்திய நாடுகள் வரிசையில் உள்ளன. அரசியல் செல்வாக்கிலும், பொருள் வளத்திலும் உலகில் முன்னிலை பெறுகின்ற நாடுகள். இவற்றின் எதிர்ப்பை எதிர்காலத்தில் இலங்கையால் சமாளிக்க முடியுமா என்பதைப் பொறுத்திருந்துதான் பாஉக்க வேண்டும்.

தான் பிடித்த முயலுக்கு மூன்று கால்கள் என்ற நிலையில் இலங்கை உலக நாடுகளுடன் முரண்பட்டு வருவது பாதுகாப்பான எதிர்காலத்துக்கு உகந்ததல்ல. இந்த நாடுகளைப் பகைத்துக்கொண்டு இலங்கைக்கு உதவ எந்த வல்லரசாவது முன்வரலாம் என இலங்கை நினைக்குமானால் அது பகற்கனவாகவே முடியும். இதுதான் அரசியல் யதாஉத்தம்.

### *குற்றச்சாட்டுகள் தெளிவானவை*

இலங்கைமேல் உலக நாடுகளால் வைக்கப்படும் குற்றச்சாட்டுகள் தெளிவானவை. அவற்றைப் பற்றி திரும்பத்திரும்ப பேசிக்கொண்டிருக்கத் தேவையில்லை. இந்தக் குற்றச்சாட்டுகளைக் களையுந்திறன் இலங்கைக்கு நியவே இருக்கிறது. இந்தத் திறனில்தான் அதன் எதிஉகாலமும் தங்கியிருக்கிறது. ஆனால் அற்ப அரசியல் அவாக்களால் உள்சூழலிலிருந்து வெளியேவர தயக்கம் காட்டுவதுதான் இலங்கையின் மிகப்பெரிய பலவீனம்.

உலகப் பொதுநீதிக்கு அமைவாக இலங்கை அரசும் நடைபோடும் காலம் உருவாகும்வரை இலங்கை தனது ஒவ்வொரு நகஉவிலும் புதுப்புதுச் சிக்கல்களைச் சந்தித்துக் கொண்டேயிருக்கும். இலங்கையை வழிநடத்துவோஉ இந்த உண்மையை உணர்ந்து தமது பாதையைச் செப்பனிட்டுக் கொண்டாலன்றி இவற்றிலிருந்து மீளமுடியாது.

FLY WINGS
Travel Agents



Lic No : 31883

- Competitive Airfares
- Accommodation & Tours
- Travel Insurance
- Interstate Coach Bookings



For All Your Travel Needs Contact Your Friendly Travel Agent

SHOP 4 DANDENONG ARCADE, 236 LONSDALE STREET, DANDENONG 3175
PH: (03) 9791-7522 FAX: (03) 9794-7844 EMAIL: fly1@net2000.com.au

LOANS! LOANS! LOANS!



வீடு வாங்கும் எண்ணமா?
வியாபாரம் ஆரம்பிக்க,
விரிவாக்க விருப்பமா?
முதலீடு செய்ய எண்ணமா?
சகல விதமான கடனுதவிகளும்
சிறப்பாக செய்து தரப்படும்.

Residential / Investment
Commercial Loan and
Equipment Finance

For obligation free consultation & Assessment
A friendly consultation backed up by more than
20 years of banking experience

Contact
Vivek N. Vivekananthan
0407 561 269


Tantalizing your taste buds @
EXOTIC INDIAN &
SRI LANKAN CUISINE
THE MANGO TREE
TAKEAWAY & CATERERS
Between 12.00 - 2.00 p.m
Takeawy only
For Limited Time only
*Food images are for illustrative purposes only and please check the actual food before confirming the order.
NEW!
$5 MEAL DEAL
LUNCH DEAL
Rice
01 Meat Curry
02 Veg. Curries
Mango Tree,
12, Clow Street, Dandenong, Vic 3175
(Opposite to KFC)
(03) 9791 1111, 0403 058 808
www.mangotreetakeaway.com.au